உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௯.] சாதாரண-ஹூ பங்குனிமீ. [பகுதி-௫.

## *யசோதரகாவிய ஆராய்ச்சி

தமிழ்ப்பாஷையிற் சிறந்த முதுநூல்களெனக் கொள்ளப்படும் ஐந்து பெருங்காப்பியங்களே போல, ஐந்து சிறுகாப்பியங்களும் உள்ளன வென்பதறியாதார் யார்? ஆயினும் இந்நூல்கள் ஆங்காங்கு மறைந்து கிடப்பதனால், பலரும் அவைகளின் பெயர்களைமட்டும் காதாற் கேட்டவரேயாவர். அறிவைப் பெருக்குவதே பிறவிப்பயனாகக்கொண்டு உழைக்குமுத்தமர்களின் விடாமுயற்சியால், அவ்வகைப்பட்ட நூல்களுள்ளும் சிலசில உயிர்பெற்றுத் தலைநீட்டி வெளியேவருகின்றன. இவ்வாறு வெளிவந்த நூல்களிலொன்றாகும் "யசோதரகாவியம்" என்னுமிச் சிறுகாப்பியம். இந்நூல் நமதுநண்பர் தில்லையம்பூர். மகா-ா-ா-ஸ்ரீ: வேங்கடராம ஐயங்காரவர்களால் இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. இக்காவியத்தின் காலத்தைப்பற்றி நம் அறிவுக்குப் புலப்பட்ட மட்டிற் சிறிதிங்காராய்வாம்.

யசோதரகாவியம், நாககுமாரகாவியம், உதயனகாவியம், சூளாமணி, நீலகேசி என்னுமிவ்வைந்தும் வடமொழிப்பெயர்களேயாம். இவற்றுள் முற்கூறிய மூன்றுகாவியங்களும் வடமொழியிலுமுள்ளன. அவைகள் முறையே "யசோதரசரித்திரம்," நாககுமாரகாவியம்," "உதயனசரித்திரம்" எனப்படும். "சூளாமணி," "நீலகேசி" இவ்விரண்டும் வடமொழியிலுண்டென்றேனும் இல்லையென்றேனும்

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பத்தாம் வருஷோற்சவ காலத்தில் (26—5—11-ல்) படிக்கப்பெற்றது.

இதுகாறும்யாம் திட்டமாய்க்கண்டறிந்தபாடில்லை. வடமொழியிலுள்ள யசோதரசரித்திரம்வாதிராஜமுனிவராலும், நாககுமாரகாவியம்உபயபாஷா சக்கிரவர்த்தி மல்லிஷேணமுனிவராலும் இயற்றப்பெற்றனவென்பது அந்நூல்களினின்றுமேநன்குவெளியாகின்றது. வடமொழியிலுள்ள "யசோதரசரித்திரம்" நான்கு சருக்கங்களாலும், தென்மொழியிலுள்ள "யசோதரகாவியம்" ஐந்து சருக்கங்களாலும்முடிவுபெற்றுள்ளன. வடமொழிக் காவியத்தில் 296-சுலோகங்களும், தென்மொழிக்காவியத்தில் 320-செய்யுட்களும் உள்ளன. ஆதலின் இவ்விரண்டுகாவியங்களும் ஒருவாறு பரிமாணத்தில் ஒன்றற்கொன்று சமமாகவே யிருக்கின்றன. இரண்டு காப்பியங்களையும் பலவிடங்களிலும் ஒப்புநோக்கியக்கால், இவ்விரண்டும் பெரும்பாலும் பிம்பப்பிரதிபிம்பங்களோவென ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. யசோதரகாவியத்தைத் தமிழிற் பாடியவர் ஜைனர் என்பது காப்புச்செய்யுளாலேயே நன்கு விளங்குகின்றது. ஆயினும் அவர்பெயர் அறியவகையில்லை.

இந்நூலாசிரியர் சிலசில வடசொற்களையும் வடமொழி வழக்குக்களையும் தமது காப்பியத்தில் கையாளுகின்றார். இவ் வடசொற்கள் யாவும் மிகுதியாக வடமொழிக்காவியமாகிய யசோதரசரித்திரத்தில் அவ்வவ்விடங்களிற் காண்பனவாகும். இவைகளிற் சில மேற்காட்டப்படுகின்றன.

(1) "ஆதபத்தி லுலர்ந்தவை யாதலாற்
காது காகங் கவர்ந்தன வாமெனிற்
றீது தாமுஞ் சிராத்தஞ் செயற்கென
வோதி னாரினி யொன்றுள தென்றனர்." III. 33.

"தீதி தென்று பிசிதமுந் தேர்ந்துழிச்
சாத நல்ல தகர்முகத் துப்படிற்
பூத மென்றனர் புண்ணிய நூல்களி
ஞாத நாத ராதிக னன்றரோ." III 34.

இங்கு ஆதபம் (வெயில்), சிராத்தம் (பிதிருதேவதைகளின்பொருட்டுச் செய்யப்படும் கிரியை), பிசிதம் (புலால்), சாதம் (பிறப்பு), பூதம் (தூய) இவைகள் வடசொற்கள்.

“ஶ்ருத்வைவம் வ்யதிதம் தஸ்யைவக்ஷ்ய [?]
ஶ்ராவகஶ்ரேணி ந யோமத்ருதீக்ஷ்ய। [?]
காகக்ரூரக்ரமோ வ்யாக்ஹ்ரஸ்தஸ்யைவார்பிதம் [?]
போஷணாயைவ தஸ்ம நய விப்ராஃ॥ [?] III. 60.

கிந்து பக்ஷ்யஸ்யைவ பக்ஷ்ய சதேஷு [?]
ஸர்வேஷ: ஸர்வதா ஶாஸ்த்ரதி ஶாஸ்த்ரஸ்ய। [?]
ஜநஃஸ்வ வஸ்ஸ யஸ்ஸ்விதாஸ்ர [?]
நாஸ்யாத்ரேஸ்ஸநய: ப்ரவக்ஷ்யந்தி।” [?] III. 61.

வடமொழிச் சுலோகத்திலுள்ள “மாம்ஸம்” என்பதற்குப் பிரதிபதமாகிய “பிசிதம்” தமிழ்ச்செய்யுளில் உளது. மற்ற வடசொற்கள் சுலோகத்திலுள்ளவைகளே.

(2) “வள்ளிய மலருஞ் சாந்து மணிபுனை கலனு மின்றாய்
வெள்ளிய துடையோன் றாகி வென்றவ ருருவ மேலார்
கொள்ளிய லமைந்த கோலக் குல்லக வேடங் கொண்ட
வள்ளலு மடந்தை தானும் வளநகர் மருளப் புக்கார்.”

I. 23.

இங்குக் குல்லக என்பது வடசொல். “க்ஷுல்லக” “க்ஷுல்லக” இவ்விரண்டிற்கும் “அற்பமாகிய” வென்பது பொருள்.

“க்ஷுந்நஜந்துஶ்ராஸ ஹிம்ஸாமோஹ ஸமோதி: க்ஷுல்லகத்வயம்।” [?]

என்று யசோதர சரித்திரத்திலுள்ளது.

(3) “பூதிகந் தத்தின் மெய்யிற் புண்களுங் கண்கள் கொள்ளாச்
சாதியுந் தக்க தன்றா லவன்வயிற் றளரு முள்ள
நீதவிர்ந் திட்டு நெஞ்சி னிறையினைச் சிறைசெய் கென்றாள்
கோதவிழ்ந் திட்ட வுள்ளக் குணவதி கொம்ப னாளே.” II. 33.

இங்குப் பூதிகந்தம், (தீய நாற்றம்).

“ஸஸ்யாதிகம் க்ஷுத்ஸஸ்வ ஸஹித ஸந்தி [?]
நிஸர்கதோஸ்ஜம் வரிஷ்டுவர்ஷ।” [?] II. 39.

246



என்று இதே சந்தர்ப்பத்தில் யசோதர சரித்திரத்திலுள்ளது.

(4) "மயிலு நாயும் வளர்ந்தபின் மன்னனுக்
கியலு பாயந மென்று கொடுத்தனர்
வயிரி யாகுமி சோமதி மன்னவ
னியலு மாளிகை யெய்தின வென்பவே." III. 5.

உபாயநம், (காணிக்கை).

"𑌤𑌾𑌵𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌰𑍀 𑌯𑌶𑍋𑌮𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵 -
𑌶𑍍𑌲𑌾𑌘𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍃𑌪𑌾𑌯𑍋𑌪𑌾𑌯𑌨𑌂 𑌦𑌦𑍌।" III. 37.

என்று இதே யிடத்தில் யசோதர சரித்திரத்திலுள்ளது.

(5) "அப்பி றப்பி லயர்ந்தன காதலி
யொப்பில் செய்கை யுணர்ந்த துணர்ந்தபின்
றப்பி லல்லது சாரனெண் கண்களைக்
குப்பு றுமிகைக் குத்தி யழித்ததே." III. 12.

இங்கு "ஜாரன்" என்ற வடசொல் "சாரன்" என்று வந்தது. ஜா ரன், (கள்ளநாயகன்).

"𑌜𑌾𑌰𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍀𑌰𑍍𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 -
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑍍𑌣𑍋𑌦𑌯𑌂 𑌕𑍇𑌕𑍀।"

என்று இதே யிடத்தில் யசோதர சரித்திரத்திலுள்ளது.

(6) "முத்த வாணகை யாண்முனி வுற்றனள்
கைத்த லத்தொரு கற்றிரள் வீசலு
மத்த கத்தை மடுத்து மறித்தது
தத்தி மஞ்ஞை தரைப்பட வீழ்ந்ததே." III. 13.

இங்கு "மஸ்தகம்" என்ற வடசொல் "மத்தகம்" என்று வந்திருக்கின்றது. மஸ்தகம், (தலை).

247



"ஶ்ரேஷ்டிகே விஷயே ஶேஷே தாஸ்யேந்த்ரதத்த்யா
ஸஸ்யஶ்ச ஸ நிவாஸோ யஸ்ய தஸ்யாஶ்ச॥"

என்று இதேயிடத்தில் யசோதர சரித்திரத்திலுள்ளது.

(7) "தரள மாகிய நயநத்தொ டஞ்சிறை சாபம்போற் சவியன்ன
மருள மாசனம் வளர்வுழிச் சுடர்க்கண மணிமுடி தனையொத்த[கட்
வொளிரு பொன்னன சரணங்கள் வயிரமுள் ளொப்பில பேரின்
டளர்வில் விரியந் தகைபெற வளர்ந்தன தமக்கிணை யவையாமே."
III. 65.

இங்குத் தரள (சஞ்சல), நயநம் (கண்), சவி (ஒளி), சரணம் (கால்) இவைகள் வடசொற்கள்.

"தரளநயநோ தாரஸ்யாம்ஸ: பத்ரவிஷ்டோஷ.
பாதயுகே சதுரார்ந்த்ரம் ஜவாகாஸ்ரஷ்டவி।
ஸுநக்ஷுஷ்யயாசௌசயாங்காஸ்த்ராணாஞ்சாரள
ஸாவஸவ்யதாம் சௌ தத்வோஸ ஸாஸஜ்ரவாஸிதள॥"

என்று இதே சந்தர்ப்பத்தில் யசோதரகாவியத்தில் வந்திருக்கிறது.

பின்னும் அண்டம் (முட்டை), அத்திகூடம் (யானைகட்டுமிடம்), அத்திபகன் (யானைப்பாகன்), அநங்கன் (மன்மதன்), அநசநம் (பட்டினியாயிருத்தல்), அநேகவாரம் (பன்முறை), ஆலோகம் (ஒளி), ஏகசித்தன் (மனதை ஒரே நிலையில் நிறுத்தினவன்), கண்டகன் (துன்புறுத்துவோன்), கரி (யானை), க்ஷாரம் (காரம்), சநபதம் (தேசம்), சிந்தை (கவலை), சிவகதி (நற்கதி), சூகரம் (பன்றி), சேடி (தாதி), சோரன் (திருடன்), சேதம் (துண்டித்தல்), துர்த்தேவதை (கெட்டதெய்வம்), துருமதி (துர்ப்புத்தி), பரிவாரம் (சுற்றத்தார்), பவம் (பிறப்பு), பாவமூர்த்தி (பாவமேஉருவெடுத்துவந்தவன்), போகசித்தன் (உலகவின்பங்களிலேயே மனதைச்செலுத்தியவன்), புளிந்தன், புளிஞன் (வேடன்), மயிடம், மஹிஷம்(எருமை), லட்டுகம், (இட்டலி) ஆகிய வடசொற்களும் இன்னோரன்ன பிறவும் இக்காவியத்தினுட் காணப்படுகின்றன. அவைகளில் பெரும்பாலன யசோதரசரித்திரத்தில் உள்ளனவேயாகும். அவைகளும் தென்மொ

ழிக் காவியத்தில் எவ்விடங்களில் காணப்படுகின்றனவோ அதேயிடங் களில் வடமொழிக்காவியத்திலுள்ளன.

(8) "உளங்கொள மலிந்த கொள்கை யுபாசகர் குழுவி னுள்ளார்
அளந்தறி வரிய கேள்வி யபயமுன் னுருசி தங்கை
யிளம்பிறை யனைய நீரா ளபயமா மதியென் பாளுந்
துளங்கிய மெய்ய ருள்ளந் துளங்கலர் தொழுது நின்றார்." I. 21.

இந்த "அபயருசி" என்பவனை "அபயமுன்னுருசி" என்றார்.

இதுபோலவே இக்காப்பியத்தில் வெவ்வேறிடங்களில் அமிர்த மதி என்பவளை அமிர்தமுன்மதி என்றலும், சந்திரமதி என்பவளை சந்திரமுன்மதி என்றலும், அபயமதி என்பவளை அபயமுன்மதி என் றலும், சண்டகருமனை சண்டமுற்கருமன் என்றலும் வடமொழி வழக்கேயாம். வடமொழியில், "இரணியகசிபு" என்று கூறவேண் டியவிடத்து "ஹிரண்யபூர்வம் கஶிபும்" (இரணியமுன்னுங் கசிபு)என்று மாககாவியம் முதற்சருக்கத்திலும், "தசரதன்" என்று சொல்லவேண்டியவிடத்து "தஶபூர்வரதம் யமாக்யயா தஶகண்டாரிகுரும் விதுர்புதா:।" (தசமுன்ரதன்) என்று இரகுவம் சகாவியம் எட்டாவது சருக்கத்திலும் வந்திருத்தல் காண்க. சிவப் பிரகாச சுவாமிகள் பிரபுலிங்கலீலையில் (சோமயாஜி) "சோமாசி" என்பவரை "சோ ஆதி உடை மாசி" என்று கூறியுள்ளாராயினும், அது வடமொழிவழக்கைத் தழுவிய பிற்காலத்துத் தமிழ்நடையே ஆகும்.

(9) "அரசனின் னகத்து மாட்சி யகோ பேரி தழகி தாயிற்
றுரைசெய்தா லுறுதி யாய துணர்ந்துகொண் டுயர்தி போலும்
விரைசெய்தார் வரைசெய் மார்ப வினவிய பொருளி தெல்லா
நிறைசெய்தே புகல்வன் யானீ நினைவொடு கேளிதென்றான்." I 64

இங்கு அஹோ என்ற வடசொல் அகோ என்றெழுதப்பட்டுளது. ஆச்சரியம் என்பது அதன் பொருள்.

"அஹோ ஹாஸ்யமஹோ ஹாஸ்யமஹோ வயமஹோ வயம்।
அஜ்ஞ்யஷ்டா மத: ஸ்வஸ்மின்னத்யர்தாபத்ர: பதஜ்ஜலி:॥"

என்று பதஞ்சலிசரித காவியத்துள் மேற்கோளாய் வந்துள்ள பிராசீன சுலோகத்திலிருப்பதுபோல இங்கும் "அகோ பெரிதழகிதாயிற்று" என்றார். மேலும்,

> "𑌹𑍋 𑌹𑍋 𑌨𑌰𑌾𑌧𑍀𑌶𑍍𑌵𑌰 𑌸𑌾𑌧𑍁 𑌸𑌾𑌧𑍁
> 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌾।"

(ஓ ஓ அரசனே! நன்று நன்று, உன் மதி அறநெறியிற் சென்றது.) என்ற யசோதரசரித்திர சுலோகத்தின் முதற் பகுதியிலுள்ளகருத்தே, மேலேயுள்ள செய்யுளின் முதலடியிற் கூறப்பட்டுளது.

(10) "உள்வி ரிந்த புகைக்கோடி யுண்டென
வெள்ளு கின்றன ரில்லை விளக்கினை
உள்ளு கின்ற பொருட்டிற மோர்பவர்
கொள்வ ரெம்முரை கூறுதற் பாலதே."

இங்குப் 'புகைக்கொடி' என்றது நெருப்பினை. இவ்வாறுபுகன்றது "தூமகேது" "தூமத்துவஜன்" என்றுள்ள வடமொழி வழக்கைத் தழுவியேயாம்.

இது நிற்க; இனி யசோதர சரித்திரத்துள்ள சுலோகங்களையும் யசோதரகாவியத்துள்ள செய்யுட்களையும் ஒன்றேடொன்று ஒருங்குவைத்து ஒப்புநோக்குங்கால், அவ்விரண்டிலும் பொருள்வெவ்வேருகக் காணப்படவில்லை. இதனையுஞ் சிறிது அடியிற்காட்டுவாம்.

(1) "𑌪𑍌𑌰𑌾 𑌨𑌰𑌪𑌤𑍇𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯 𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌂𑌭𑌿𑌤𑌾𑌃।
𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌤𑌦𑌾𑌨𑌯𑌨𑍍॥
𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑍋𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌹𑌿𑌷𑌵𑌰𑌾𑌹𑌶𑌿𑌖𑌿𑌨𑌾𑌦𑌯𑌃।
𑌬𑌦𑍍𑌧𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌾𑌸𑍇 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌪𑌿𑌤𑌾𑌃॥"

இதன் பொருள்:—பட்டினத்துக்குடிகள் அரசனதாணையால் எத்திசைகளினின்றும் இரட்டை யிரட்டையாகப் பலவகைப்பட்டபிராணிகளையும் கொணர்ந்தனர். ஆடு, கோழி, எருமை, பன்றி, மாமயில் ஆகிய இவைகள் அத்தேவதையின் கோயிலில் தாமணிக்கயிற்றால் பிணைக்கப்பட்டு வாதனைப்பட்டுக் கூச்சலிட்டு நின்றன.

"மன்ன ருணையின் மாமயில் வாரணந்
துன்னு சூகர மாடெரு மைத்தொகை
யின்ன சாதி விலங்கி லிரட்டைகள்
பின்னி வந்து பிறங்கின கண்டனன்." I. 16.

(இன்னும் வரும்.)

குப்புஸாமி சாஸ்திரி.

---

# NOTES ON ASTROLOGY
# சோதிடநூற் குறிப்புகள்

## மூவகை ஆன்மாக்கள்

வேதாந்தமதத்தின்படி மூன்றுவிதமான ஆன்மாக்கள் உளர். இவர்கள் உத்தமாதிகாரி, மத்தியமாதிகாரி, அதமாதிகாரி எனப்படுவர். எப்பொழுதும் பரப்பிரம்மத்தியானத்தில் அமர்ந்திருக்கும் யோகிகள் உத்தமாதிகாரிகளாவர். இவர்கள் நிலையில்லாத உலகத்துச் சிற்றின்பங்களை நாடாதவர்கள். மிக்க பக்தியுடையவர்களாயிருந்தும் ஸம்ஸாரஸாகரத்தில் உழன்று அதற்குரிய தொல்லைகளினுற் பிடிக்கப்பட்டுக்கொண்டு சிலர் இருக்கிறுர்கள்; ஸம்ஸாரத்தில் இருந்துகொண்டே இவர்கள் தத்துவத்தை (உண்மையான ஞானத்தை) நாடுகிறுர்கள்; இவர்கள் மத்தியமாதிகாரிகளாவார்கள். உலகத்துச் சிற்றின்பங்களை மாத்திரமே நாடுகிறவர்கள் அதமாதிகாரிகளாவார்கள்.

உத்தமாதிகாரிகள் கர்மத்தைக் கடந்தவர்கள். அவர்கள் எப்பொழுதும் பக்தித் தியானங்களிலேயே மூழ்கியிருப்பவர்கள், வேறெதனிலும் அவர்களுடைய மனம் செல்லாது; அவர்கள் செய்யுங் காரியங்களெல்லாம் சுத்தமான ஸத்காரியங்களாக இருக்கும்; அந்தக் காரியங்கள் நன்மையே பயக்கும்.

அதமாதிகாரிகள் கழிபட்டவர்களெனத் தக்கவர்கள். எத்தனை புத்தி சொல்லினும், எத்தனை தண்டனை விதிக்கினும் அவர்கள் தங்

கள் வழியை விடார்; அற்பசுகங்களையே காமுறுவர்; காமக்குரோதாதிகளில் ஆழ்ந்திருப்பர்; தன்னயத்தையே முக்கியமாகக் கருதுவர். அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தல் முடியாது.

ஆகவே, உத்தமாதிகாரிகளையும் அதமாதிகாரிகளையும் தவிர்த்து, மத்தியமாதிகாரிகளைக் குறித்தே சுருதிகளும் ஸ்மிருதிகளும் கர்மாக்களை விதித்திருக்கின்றன. இந்தக் கர்மாக்கள் பாபங்களைப் பரிகரிப்பதன்றி (போக்குவதன்றி) நல்வழிக்கும் ஸாதனமாக இருக்கின்றன. மத்தியமாதிகாரிகள் ஸம்ஸாரத்தில் உழன்றாலும் நற்கதி பெற வேண்டுமென்று விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மனம் ஸ்திரப்படவில்லை, சஞ்சலமுற்றிருக்கின்றது. இப்படிப்பட்டவர்களுக்குச் சகாயமாக இருக்கும்பொருட்டு வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் அனேக கர்மாக்களை விதிக்கின்றன. பீடைகளைப் பரிகரிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் கர்மாக்களுக்கும் சோதிடசாஸ்திரத்திற்கும் விசேஷ சம்பந்தம் உண்டு.

### உத்தமாதிகாரிகள்

எப்பொழுதும் ஈசுவரனையே தியானித்துக்கொண்டு, பக்தியிற் சிறந்து, யோகமார்க்கத்திலிருக்கும் மகான்களுக்கு நல்லகாலம் என்பதும் கெட்டகாலம் என்பதும் இல்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுக்கு நல்லகாலமேயாகும். அவர்கள் நன்மைதீமை, ஸுகம் துக்கம் என்னும் இரட்டைகளைக் கடந்தவர்கள். சாதாரணமான மானிடரைப்போல் அவர்கள் சுபாசுப முகூர்த்தங்களைக் கவனித்து நடக்கவேண்டியவர்களல்லர். என்னையெனின், அவர்களுக்கெல்லா முகூர்த்தங்களும் சுபமுகூர்த்தங்களே. அவர்கள் மிக்க மனோதிடம் உடையவர்கள். ஆதலின் அவர்கள் மாண்டவ்யர் என்னும் ருஷி புங்கவருடைய கொள்கையை அனுசரித்து நடப்பவர்களாவர். "மனோஜபந்து மாண்டவ்யம்"—மனத்தில் திடம் (தைரியம்) எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுது நினைத்த காரியத்தைச் செய்வது மாண்டவ்ய மகாயோகியின் மதம். மனோதிடமுண்டானால் கிரகங்களின் நிலையையும் நக்ஷத்திரங்களின் பலாபலத்தையும் கவனிக்கவேண்டாம். கிரகங்கள் முதலியன சரியான நிலைமையில் இல்லாவிடில் மனோதிடம் எப்படி யுண்டாகும்? மனோதிடமுண்டா

கும் காலம் நல்லகாலமாகவே இருக்கும். இங்கு மனோதிடமென்பது நம்போலியருக்கு உண்டாகக்கூடிய முரட்டுத் தைரியமன்று. ஈசுவர பக்தியும் ஸம்ஸாரப்பற்றின்மையும் பொருந்திய புண்ணியவான் களுக்கு உண்டாகும் மனோதிடமே இங்குக் குறிக்கப்பட்டது. இப் படிப்பட்டவர்கள் எந்தக் காரியத்தை எப்பொழுது செய்யநினைக்கிறார் களோ "ததேவ லக்னம்," அதுவே அதற்கு நல்லவேளை. இப்ப டிப்பட்ட மகான்களுக்குச் சோதிட சாஸ்திரம் அவசியமில்லை.

## சோதிடம் எவர்க்குப் பயன்படும்

மூன்றும் வகுப்பினரான அதமாதிகாரிகளுக்குப் பரலோகத் தின் ஞாபகமே கிடையாதன்றோ? பரலோகத்தை யனுசரித்த நன் மையும் தீமையும் அவர்களுக்கு நன்மை தீமைகளாகுமோ? அவர் களுடைய மூடத்தனமான தன்னயக்கொள்கைகளுக் கிணங்கிய நன் மை தீமைகள் வேறுபடும். ஆதலின் அவர்களுக்கு ஜ்யோதிஷத்தி னற் பிரயோஜனமில்லை, அவர்களுக்கு மனம்போன வழியே வழி.

இரண்டாம் வகுப்பினரான பக்தி சிரத்தையுள்ள ஸம்ஸாரிக ளுக்கு மாத்திரமே சோதிடசாஸ்திரம் பயன்படும். கர்மங்கள் செய் வதற்கு மந்திரங்கள் ஏற்பட்டிருப்பது இவர்களுக்காகவேயன்றோ? சோதிட சாஸ்திரத்தை யனுசரித்தே கர்மங்கள் ஏற்பட்டிருக்கின் றன.

## சோதிடஞானம்

பூர்வத்தில் நம்மவர்கள் வானசாஸ்திரத்தையும் அதனையனு சரித்துச் சோதிடத்தையும் மிகவாகப் பயின்றுவந்தார்கள். பரப் பிரம்மவஸ்துவைத் தெரிந்துகொள்வதற்கு ஜ்யோதிஷ சாஸ்திர ஞானம் அவசியமென்பது அவர்களுடைய கொள்கை. ஆதலின், வேதத்திற்குரிய ஆறு அங்கங்களுள் சோதிடமும் ஒன்றாகும். சோதிடநூற்பழக்க மில்லாவிடின் வேதத்திற் சிற்சில பாகங்களின், முக்கியமாக மந்திரபாகங்களின், பொருள் விளங்காது என்பர். கர்மசாஸ்திரங்களின்படி ஒவ்வொருவருக்கும் பிறப்புமுதற்கொண்டு பதினாறு அந்தஸ்துக்கள் ஏற்படுகின்றன. இந்த அந்தஸ்துக்கள் ஒவ்வொன்றாகப் பிராப்தமாகும்போது ஒவ்வொரு கருமம் செய்வ துண்டு. இந்தக் கர்மங்களுக்கு ஷோடச கர்மங்கள் என்று பெயர்.

இவற்றுள் உபநயனமும் விவாஹமும் முக்கியமானவைகளாகும். இந்தக் கருமங்களின் சம்பந்தமான மந்திரங்கள் ஒவ்வொன்றிலும், ஸந்தியாவந்தனம் முதலிய நித்தியகருமங்களிலும், நக்ஷத்திரங்கள், சூரியசந்திரர்களின் சாரங்கள் (அசைவு, ஓட்டம்,) கிரஹங்கள், பஞ்சபூதங்களின் அதிதேவதைகள் ஆகிய இவை சம்பந்தமான விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவைகளைப்பற்றித் தெரிந்துகொண்டாலன்றி நாம் அந்த மந்திரங்களின் பிரயோஜனத்தை அறியமாட்டோம். இதை உத்தேசித்தே நம்மவர் சோதிடநூலைப் பயில ஆரம்பித்தனர்; அல்லாது, பணஞ்சம்பாதிக்கும் பொருட்டும் விநோதத்தின்பொருட்டு மன்று.

## சோதிடத்தின் அங்கங்கள்

சோதிடமென்பது ஒரு பெரிய நூல். அது நான்கு அங்கங்களுடையது. அவை யாவன:— 1. சோதிடசம்பந்தமான கணிதங்கள்; இது ககோள (வான) சாஸ்திரம் எனப்படும்; ஸித்தாந்தம் என்பது இதற்கே பெயர்; 2. ஜாதகம்; 3. முஹூர்த்தம் (சுபகாலங்களைத் தெரிவிப்பது); 4. பிரச்னை (கேட்ட கேள்விகளைக் கொண்டு குறிசொல்வது).

## சோதிடத்தின் முக்கியாமிசங்கள்

ஒவ்வொரு நூலுக்கும் முக்கியமான அம்சங்கள் சில உள. அவை சாதாரணமாக மூன்று ஆகும். க்ஷேத்திர கணிதத்தின் முக்கியாமிசங்கள் 1. புள்ளி, 2. கோடு, 3. பரப்பு. தர்க்க சாஸ்திரத்தில் முக்கியமானவை 1. பக்ஷம், 2. தாஷ்டாந்தம் (கேள்வி, ஸூத்திரம்), 3. திரிபாத ஸித்தாந்தம் (பராமர்சவாக்கியம், மும்மடிநியாயம்). ரஸாயன சாஸ்திரத்தில் முக்கியமானவை 1. வன்பொருள், 2. ஜலபதார்த்தம் (திரவவஸ்து), 3. வாயு,—அல்லது, 1. புளிப்பு, 2. காரம் (ஆண் சரக்கு), 3. உப்பு. இந்த மாதிரியாகவே சோதிட சாஸ்திரத்திலும் முக்கியமான அமிசங்கள் மூன்று உள. அவை யாவன:— 1. காலம், 2. தேசம் (இடம்), 3. கிரஹங்கள். பாரமார்த்திகமாக விசாரிக்குமிடத்து, தேசமே பிரகிருதியாகும், காலமே கர்மமாகும், கிரஹங்களே ஆத்மாவாகும்.

வான வெளியில் கிரகங்கள் தத்தம் கால நிர்ணயத்தின்படி சுற்றிவருவதனாலேயே இந்த உலகத்திற் பற்பல புதுமைகளும் தோற்றங்களும் உண்டாகின்றன. அனைவர்க்கும் அனைத்திற்கும் இறைவனாகி ஆதிமூலமாயுள்ள பகவான் இந்த உலகத்தைப் படைத்து பாலிக்கும் அற்புதத்தை அறிந்து கொள்வதற்கு இந்தக் கிரகங்களின் சாரங்கள் (ஓட்டங்கள்) சிறிய உதாரணங்களாக இருக்கின்றன.

ஜீவாத்மாவின் கருமத்திற்குத் தக்கபடி பிரகிருதியில் தேகம் ஏற்படுகின்றது. அந்தத்தேகத்தை மேற்கொண்டு ஜீவாத்மாவானது விவகரிக்கின்றது.

### காலமும் அதன் விபாகங்களும்

காலம் நிரந்தரமாயுள்ளது, எப்பொழுது மிருப்பது, அதற்கு அந்தமில்லை. அஃது எப்பொழுதும் விரைந்து செல்லும் தன்மையது, ஓடிக்கொண்டே இருக்கும். இவை எல்லார்க்கும் தெரிந்த விஷயங்கள். ஆதலின் அப்படிப்பட்ட காலத்தின் ஒரு பகுதியைப் பிரிவினைப்படுத்தி வேறாகக் குறிப்பது மிகவும் கஷ்டமான காரியம்.

ஆதலின் உலகத்திலுள்ள பற்பல ஜாதியார்களும் ஏதோ ஒரு விசேஷமான காரியத்தை முன்னிட்டே காலத்தைக் கணக்கிடுவது வழக்கமாக இருக்கின்றது. கீர்த்திபெற்றதோர் அரசன் பிறந்த தினத்தையோ, பெரிய வெற்றிவாய்ந்த தினத்தையோ, வேறேதாவது விசேஷசங்கதி நிகழ்ந்த தினத்தையோ அடையாளமாக வைத்துக் கொண்டு அவரவர்கள் காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டு வருகிறார்கள். இவ்வாறாகக் கிறிஸ்துசகம், ஹிஜிரா, விக்கிரமார்க்க சகம், சாலிவாகனசகம், கொல்லம் ஆண்டுஆகிய இவைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அதே மாதிரியாக ஆரியருடைய சோதிடத்தில் பிரம்மசிருஷ்டியே (நான்முகப் பிரமமாவின் உற்பத்தியே) கணக்குக்கெல்லாம் ஆதி. காலத்தைக் கணக்கிடுவது அது முதலே. அதன் பிறகு நடந்தகாரியங்களைக் கொண்டு காலத்தின் பிரிவுகளைக் குறிக்கிறார்கள். இந்தக் காலப் பிரிவுகள் 'பொது' என்றும் 'சிறப்பு' என்றும் இருவகைப்படும். இவ் விருவகைக் காலப்பகுதிகளுக்கு முள்ள வித்தியா

சம் முக்கியமானது. இனிக் கூறும் உதாரணங்களில் இந்த வித்தியாசம் விளங்கும்.

## ஆரியருடைய காலப்பகுதிகள்

பொதுப் பிரிவினையென்று சொல்லப்பட்ட காலப் பகுதிகளாவன:— 1. கல்ப்பம், 2. மன்வந்தரம், 3. யுகம், 4. சகம், 5. நூற்றாண்டு அல்லது தலைமுறை, 6. வருஷம், 7. ருது அல்லது பருவம், 8. மாஸம், 9. பக்ஷம் (15 நாள்), 10. வாரம் (7 நாள்), 11. தினம் (ஒருநாள்), 12. நாழிகை, 13. கடிகை, 14. விகடிகை.

இவை யெல்லாம் பொதுப் பெயர்கள். ஒரே பெயருள்ள பகுதியின் காலஅளவை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இராது. ஸ்வாயம்புவமன்வந்தரத்திலடங்கிய வருஷங்களே வைவஸ்வதமன்வந்தரத்திலும் இரா. ஆயினும், இரண்டிற்கும் மன்வந்தரம் என்னும் பெயர் செல்லும். கலியுகத்திலடங்கிய வருஷங்கள் எத்தனையோ அத்தனையே மற்ற யுகங்களிலும் இரா. ஆயினும் யுகம் என்னும் பெயர் மற்றவைகளுக்குஞ் செல்லும். இதற்கு உதாரணமாக, ஆங்கிலத்தவர் மாசம் என்று முப்பது நாளைக் குறித்த போதிலும் ஜனவரி மாதத்திற்கு 31-நாள், பிப்ரவரிமாதத்திற்கு 28-அல்லது 29 நாள் வைத்துக்கொண்டு விவகரிப்பதைக் காண்க. எல்லா மாதங்களுக்கும் மாதம் என்னும் பெயர் செல்கின்றதாயினும் ஒவ்வொரு மாதத்திலடங்கிய நாட்கள் வித்தியாசப்படும்.

## சில காலப்பகுதிகளின் நிர்வசனம்

கல்ப்பம் என்பது பிரம்மாவின் (நான்முகப்பிரம்மாவின்) ஆயுட்காலம். மன்வந்தரம் என்பது ஒரு மனுவின் ஆயுட்காலம். ஒரு பிரம்ம கல்ப்பத்திற் பதினான்கு மன்வந்தரங்கள் உள. ஒவ்வொரு மன்வந்தரமும் கால அளவையில் வித்தியாசப்படும்.

யுகம் என்பது ஒரு பெரிய காலப் பகுதி; மன்வந்தரத்திற்குச் சிறியது. வேதாந்த ஞானம் (பிரம்மஜ்ஞானம்) மிகுந்தும் குறைந்தும் இருப்பதற்குத் தக்கபடி, யுகங்களின் பெயர்களும் மாறும். எங்ஙனமெனின், கிருதயுகத்தில் பிரம்மஞானம் மிகுந்திருந்தது; திரேதாயுகத்தில் காற்பங்கு குறைந்தது; துவாபர யுகத்தில் அரைப்

பங்கு குறைந்தது; கலியுகத்தில் முக்காற்பங்கு குறைந்தது; குறைவதாவது வேதாந்த மதமல்லாத மற்ற மதங்களினல் வேதாந்த மதத்தின் சிறப்பு விழுங்கப்பட்டது என்பதாம். சிறப்புக்குத் தக்க வாறு உத்தமம், மத்தியமம், அதமம் என்று எதையும் வகுப்பது போல, காலத்தையும் பொற்காலம், வெள்ளிக்காலம், இரும்புக்கா லம் என்று பிரிப்பாரு முளர்.

ஒரு வருஷம் என்பது பூமியைச்சுற்றி ஒரு கிரகம் ஓடுவதற் குச் செல்லும் கால அளவையாகும். ஆதலின், எத்தனை கிரகங்க ளிருக்கின்றனவோ அத்தனைவிதமான வருஷங்களும் இருக்கின்றன. அந்தந்த வருஷத்தின் கால அளவை வேறுவேறுயிருக்கும். வருஷ த்தின் கால அளவையில் இந்த வித்தியாசமானது அந்தக் கிரகத்திற் கும் பூமிக்கும் இருக்கிற தூரத்தைப் பொறுத்திருக்கும். இப்படி யாகச் சாந்திரமானத்தின்படி ஒரு வருஷம் (ஒரு சந்திர வருஷம்) என்பது 354 நாள் கொண்டது. ஸௌரமானத்தின்படி ஒரு வரு ஷம் (சூரியவருஷம்) என்பது 365 நாள் கொண்டது. அங்காரக வருஷம் இதனினும் நீடியது; அதைவிட நீடியது பிருஹஸ்பதி வருஷம்; அதனினும் நீடியது சனி வருஷம்.

### இந்தியாவில் வழங்கும் வருஷங்கள்

ஒவ்வொரு கிரகத்திற்கும் பூமிக்குமுள்ள தூரத்தை அனுசரி த்து ஒவ்வொருவருஷம் வேறுவேருக ஏற்படினும், ஆரியர்கள் தங் களுடைய வைதிககருமானுஷ்டானத்தின் பொருட்டு வருஷங்களை ஐந்து வகையாகப் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவை யாவன,—1. சாந்திரமானம், 2 ஸௌரமானம், 3. ஸாவனம், 4. நக்ஷத்திரமானம், 5. பார்ஹஸ்பத்தியமானம்.

சாந்திரமானம் என்பது சைத்ரசுத்த பிரதிபத்முதல் (பங்குனி மாசம் சுக்கிலபக்ஷம் பிரதமையிலிருந்து) பால்குண அமாவாஸை வரையிலும் (பங்குனி மாசம் அமாவாசை வரையிலும்) கொண்டது. சாந்திரமான வருஷத்தில் அடங்கிய தினங்கள் 354. மாசங்களைப் பற்றிப் பின்னர் விவரிப்பாம். சைத்திரம் முதலிய பன்னிரண்டு மா சங்களும் சந்திரனுடைய சாரத்தை அனுசரித்து வந்த பெயர்களா

257



கும்; அமாவாஸைகளும் மற்றைத் திதிகளும் சந்திரனுடைய சாரத்தினாலேயே ஏற்படுகின்றன.

ஸௌரமானம் அல்லது சூரிய வருஷம் என்பது சூரியன்மேஷ ராசியிற் பிரவேசிக்கும் தினம் முதல் மீனராசியை விட்டுப் பெயருந் தினம் வரையிற் கொண்டது. இது சாதாரணமாக ஏப்ரில் மாசம் 12-ஆம் தேதி முதல் ஏப்ரில் மாசம் 11-ஆம் தேதி வரையிலாகும்.

ஸாவன வருஷம் என்பது 360 நாள் கொண்டது; எது முதலேனும் கணக்கிடலாம்.

நாக்ஷத்திரிக வருஷம் என்பது நக்ஷத்திரங்கள் என்னும் பெயரிலிருந்து வந்ததாகும். நக்ஷத்திரங்கள் பன்னிரண்டுதடவை சுழன்று வருவது நாக்ஷத்திரிக வருஷமாகும். நக்ஷத்திரங்கள் 27 இருக்கின்றமையின் நாக்ஷத்திரிக வருஷமென்பது $27 \times 12 = 324$ தினங்கள் கொண்டதாகும்.

பார்ஹஸ்பத்யவருஷம் என்பது பிருஹஸ்பதி என்னும் பெயரிலிருந்து வந்தது. பிருஹஸ்பதி ஒரு ராசியில் தங்கியிருக்குங் காலத்திற்கு பார்ஹஸ்பத்திய வருஷம் என்று பெயர். இது சாதாரணமாக 361 நாளாகும்.

கணக்கிடுவதற்காக இந்தியாவிலுள்ள எல்லாச் சாதியார்களும் எடுத்துக்கொண்டிருப்பது ஸௌரமானமேயாகும்; நிஷ்காம்யமான சிராத்தம் தர்ப்பணம் முதலிய வைதிக கர்மங்கள் செய்வதும் அதனை அனுசரித்தேயாம். காம்யமான விரதாதிகள் செய்வதற்கு மாத்திரம் சாந்திரமானத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சாந்திரமானத்து மாசங்களாவன:—1. சைத்திரம், 2. வைசாகம், 3. ஜேஷ்டம், 4. ஆஷாடம், 5. சிராவணம், 6. பாத்ரபதம், 7. ஆச்வயுஜம், 8. கார்த்திகம், 9. மார்க்கசிரம், 10. புஷ்யம், 11. மாகம், 12. பால்குணம்.

ஸௌரமானமும் சாந்திரமானமும் தவிர மற்ற வருஷங்களை வடஇந்தியாவில் மாத்திரம் சில ஜாதியார் வழங்குகிறார்கள்.

வருஷங்கள் பலவற்றிற்குமுள்ள காலவித்தியாசம் நன்கு கவனிக்கத்தக்கது; சிருஷ்டிக்கிரமத்தை விசாரித்தறிய விரும்புகிறவர்கள் அதை முக்கியமாகக் கவனித்தல்வேண்டும்.

தேவமானம் என்பது மேற்சொல்லிய ஐந்துவிதமான வருஷங்களுக்கும் வேறானது; என்னையெனின், கிரகங்களுக்குத் தேவர்களின் மீது ஆட்சி இலதாகும். தேவமான வருஷம் ஒன்று என்பது சாமானிய ஸௌரமான வருஷங்கள் எத்தனையோ கொண்டதாகும்.

பிரம்மகல்ப்பம் என்பது மிகவும் நீடிய காலமாகும்.

### வருஷத்தின் உட்பிரிவுகள்

வருஷம் என்னும் கால அளவையின் உட்பிரிவுகளான ருது, மாஸம், பக்ஷம், வாரம், தினம், நாழிகை, கடிகை, விகடிகை என்பனவும் அந்தந்த வருஷத்தின் கால அளவையை யனுசரித்து வித்தியாசப்படும். ஆயினும் அவற்றின் பொதுநியமக் குறிப்புகள் மாறா. அந்தப் பொதுநியமங்களாவன:—

12 மாதம் கொண்டது—ஒரு வருஷம்.
2 மாதம் கொண்டது—ஒரு ருது.
30 நாள் கொண்டது—ஒரு மாதம்.
60 கடிகைகொண்டது—ஒரு நாள்.
60 விகடிகைகொண்டது—ஒரு கடிகை.

ஒரு நாக்ஷத்திரிக மாஸம் என்பது—27 நாள்கொண்டது.

ஒரு நாக்ஷத்திரிக தினத்தில் அடங்கிய கடிகைகள் பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு ஸௌரமாசத்தில் 28 முதல் 31 நாள் இருக்கக்கூடும்.

ஒரு சாந்திரமாசத்தில் 29 முதல் 31 நாள் இருக்கக்கூடும்.

ஒரு ஸௌரதினத்தில் அடங்கிய கடிகைகள் 60.

ஒரு ஸாவன மாசத்தில் அடங்கிய தினங்கள் 30.

ஒரு பார்ஹஸ்பத்திய மாசத்தில் அடங்கிய தினங்கள் $30\frac{1}{12}$.

விகடிகையை விட நுட்பமான காலஅளவை வேண்டுமாயின் ஷட்வர்க்க ரீதியாகக் கணக்கிடவேண்டும்.

கிரகங்கள் அவ்வப்போழ்து சஞ்சரிக்கும் இடத்தை அனுசரித்து அவ்வக்காலப் பகுதிக்குப் பெயர் இடப்பட்டிருக்கிறது. இவ்வாருகச் சூரியன் சஞ்சரிக்கும் தேசபாகமாகிய மேஷராசியையனுசரித்து அப்படிச் சஞ்சரிக்குங் காலத்திற்கு மேஷமாஸம் என்னும் பெயரும், சித்திராநக்ஷத்திரத்திற் சந்திரன் சஞ்சரிக்கும் காலத்திற்குச் சைத்திரமாஸம் என்னும் பெயரும் ஏற்பட்டன.

(இன்னும் வரும்)

ஆரியன்.

---

# *ஜனசாரச் சீர்திருத்தம்

**மாட்சிமைபொருந்திய அக்கிராசனதிபதியவர்களே! கனவான்களே !!**

நமது நூதன இந்தியா தனது புராதன அந்தஸ்தைத் திரும்பவும் அடைந்துகொள்ள எத்தனித்திருக்கின்றது. இக்காரியார்த்தமாகச் சங்கங்களும் சபைகளும் அப்போதைக்கப்போது ஆங்காங்கு கூடப்பெற்று வருகின்றன. பிரசங்கங்களும் வியாசங்களும் எங்குப் பார்த்தாலும் ஓயாதுகோஷித்துக்கொண்டிருக்கின்றன. பல்வேறு அபிப்பிராயங்கள் சம்பந்தப்படவேண்டி யிருப்பதால் இத்தருணங்களில் நமதுமுன்னேற்றத்திற்கு ஆஸ்பதமாகப்பலரும் பலவிதமான அநுஷ்டானங்களை எடுத்தோதுகின்றனர். "சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ் சொல்லியவண்ணஞ் செயல்"என்றபடி ஓதியமுறைகளை ஓதியவர்களே அநுசரிக்கக்கூடாவண்ணம் அநேகதடவைகளில் வசதிக்குறைவும் ஏற்படுகின்றது. இவ்வித வசதிக்குறைவிற்கு இலக்காயிருக்கும் அன்னர் இதற்காக நிரம்பவும் கவலைப்படுவது பொய்யல்ல.

இந்தக்கவலையின் காரணத்தால் நாமெல்லோரும் நமது பூர்விக நிலைமையை வகித்துக்கொள்ள முயலுவதிற் போதிய ஆசையோடும்

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பத்தாம் வருஷோற்சவ காலத்தில் (25—5—11)-ல் ஸ்ரீமத்-M. P. மாஸ்கான்ஹாஸ்(Moscuranhos) அவர்களாற் படிக்கப்பெற்றது.

புஷ்டியான அபிமானத்துடனும் உழைக்கிறோமென்பது ஸ்பஷ்டமாகின்றது. பூர்வநிலைமை பூர்வநிலைமையென்று நான் அடிக்கடி இங்குக் கூறிக்கொண்டு வருவதில் "ஏதோ இவர் பழைய கர்நாடகத்தை அல்லது அநாகரீகத்தை இன்னுமொருமுறை இழுத்து வைக்க விரும்புகிறதாய்ச் சிலர் நினைக்கவுங்கூடும். கனவான்களே! நாகரீகமென்பதின் உண்மைப்பொருளிற் பழக்கமுள்ளவர்கள் தற்காலம் முற்காலத்திலும் நாகரீகமான காலமென மயங்கமாட்டார்கள். ஏனெனில் நம்மில் வரவரத்தான் அநாகரீகம் அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதற்கு அநேகநிமித்தங்கள் இருக்கின்றன. நேற்றிலும் இற்றைக்கு அநாகரீகம் அதிகம். இதனை இன்னமும் கவனியாதிருந்தோமானால் இற்றைமாலையைப்பார்க்கிலும் அடுத்தநாட்காலை அநாகரீகம் அதிகமாயிருக்குமென்பதற்குஎன்னதடை? காரணம்! இவ்வூரிலேயே நேற்றையிலும் மதுபானவிற்பனை இற்றைக்கு ஜாஸ்தியாயிருக்கும்; நாளை இற்றைப்பார்க்கிலும் அதிகமாகுமேயொழியக் குறையாது. இது வருடந்தோறும் பெருகிக்கொண்டேவரும் "மதுவரி" வரும்படியைக்கொண்டு அளவிடலாம். இதுதவிரப் பல்வேறு வகையானகுற்றங்களும் குழப்பங்களும் வீண்கட்சிகள் முதலிய அநாகரீக வளர்ச்சிக்கு நமக்குள் புதிதுபுதிதாக நிர்மாணிக்கப்பெற்று வருகிற நியாயசபைகளும் காவற்கூடங்களுமே ஆதாரமாயிருக்கின்றன. கல்வியுங்கூட அக்காலத்திலும் இக்காலத்தில் அதிகமென்பது எனக்கு உடன்படாதது மாத்திரமல்ல, நமது தேசத்தில் வரவரக் கல்வி குறைந்துகொண்டே வருகிறதென்பது எனது எளிய அபிப்பிராயம். காரியாம்சங்கள் இற்றைவரையும் இப்படித்தான்; நாளையிருந்து எல்லாம் ஒழுங்காகநடக்கும் என்போமாகில் அதுவும் நமது பூர்வநிலைமையைச் சிறிது புதுப்பித்துக்கொள்வதாகுமேயொழிய மற்றப்படியல்ல. ஏனெனில், இப்பிரபஞ்சத்தில் சத்கருமங்களில் ஒன்றும் புதிதல்லவென்பது ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்ட சத்தியம். ஆகவே நேற்றிலும் இன்றே அநாகரீக காலம்.

இவ்வநாகரீகப்பெருக்கிற்கு நமது சதாசாரங்களைத் துராசாரங்களாக ஆக்கிக்கொண்டதே காரணம். என்றைக்கு நமது நல்லாசாரங்களை இழக்கநேரிட்டதோ அன்றைக்கே நம்மிடையில் ஓர் அந்த

காரமான அநாகரீகம் வந்து புகுந்துகொண்டது. அந்த அநாகரீகமே முன்சொன்னதுபோல மதுவரி வரும்படியை நாடோறும் அதிகப்படுத்திவருகிறது. அந்த அநாகரீகமே ஆலயங்களில் அரும்பணிகளுக்காக அமர்த்திவைத்த தாசிகளை வேசிகளாகச் செய்தது. அந்த அநாகரீகமே தகப்பன் தொழிலைப் பிள்ளைகள் பார்க்கவொட்டாது அத்துணைக் கூச்சத்தைக் கொணர்ந்தது. இவையும் இவைபோன்ற பிறவும் நமது சதாசாரங்களை நாம் நாளடைவில் கைநெகிழ்ந்ததால் நேரிட்ட குறையேயன்றிப் பிறிதெதுவுமில்லை. நல்லது, இப்போது நாம் இன்றுகாறும் அவலமாக்கிக்கொண்டுவந்த ஆசாரங்களைத்திரும்பவும் புதுப்பிக்க முடியுமாவெனப்பார்ப்பதே நமது இற்றையவேலை. புதுப்பிக்கத்தானா! நமது புராதன ஆசாரங்களைப் பொன்போலப் பிரகாசிக்கவுஞ்செய்யலாம். அப்படிச்செய்வதற்கு நமக்குள் இருக்கும் மதவேறுபாடுகளும் சித்தாந்தத் திரிபுகளும் இடந்தருமோவென ஆட்சேபம் பிறக்கவும் கூடும். ஆசாரச்சீர்திருத்தத்திற்கு ஆகம வேறுபாடுகள் இடந்தராவென்னும் இவ்வாட்சேபத்தைச் சிலச்சில ஆதாரங்களைக்கொண்டு நாமே ஆட்சேபிக்கலாம்.

கனவான்களே! தற்காலத்திற் சீர்திருத்தம்பொருந்திய நாடுகளாகக் கூறப்பட்ட ஐரோப்பாவின் வளமுடைய தேசங்கள் இரண்டொன்றை எடுத்துக்கொள்வோம். நமது பிரித்தானிய பார்லிமெண்டில் எல்லோரும் ஒரே மதத்தினரா? அவரது ஜனானுகூலத்தில் என்ன குறையிருக்கிறது? ஜெர்மானியர் எல்லாரும் ஏகவந்தனை வழிபாடுடையவரா? அவர் தமது ஆட்சித்திறத்தில் என்ன குறைந்துபோயினர்? துருக்கிதேசத்திலுங்கூடப் புதிதாகக் கூட்டப்பட்டிருக்கும் மந்திராலோசனைச் சபையில் மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் உடலும் உயிரும்போல் நின்று ஒத்துழைக்கிறார்களென்று நாம் கேள்விப்படவில்லையா? மேனாடே ஒருபுறமிருக்கட்டும். கீழ்த்தேசங்களில் கீர்த்திபெற்றுவரும் நம்சகோதர ராஜ்ஜியமாகிய ஜப்பானைப்பார்ப்போம். ஆங்கோர்குடும்பத்தில் நான்குபிள்ளைகளிருந்தால் நான்கும் பெரும்பான்மை ஒன்றிற்கொன்று ஒத்துவராத நான்கு மதங்களைத் தழுவினராயிருக்கின்றனர். அப்படியிருக்கும் அத்தேசம் எத்தேசத்தில் எத்திறத்தில் இழிந்து நிற்கின்றது? ஆகவே நாம்

விரும்பும் ஆசாரச்சீர்திருத்தத்திற்கு மார்க்கபேதங்கள் தடையாய் நிற்கின்றனவென்பதற்குப் போந்த ஆதாரம் புலப்படவில்லையே. மேலும்,

மதாசாரங்களைத் தம் மனப்போக்கிற் கொத்தவண்ணம் மாற்றிக்கொள்ள ஈங்கெவருக்கேனும் அதிகாரம் இருக்கின்றதாகவுமில்லை. ஏனெனில், இந்துவேத சித்தாந்திகளாகிய சங்கராச்சார்யரென்ன மாத்வாச்சாரியரென்ன இராமாநுஜாச்சாரியரென்ன இவர்கள் மூவரும் தங்களுக்குள் சிற்சில விஷயங்களுள் ஒன்றையொன்றொவ்வாத விபரீதக் கருத்துக்களை உடையவராயிருந்தனர் என்று யாருக்குத்தான் தெரியாது? நமது இந்து சகோதரர்களால் மிகவும் மேலான அவதார புருஷர்களாக மதிக்கப்படும் இவ்வாசான்கள் மூவரும் அவரது வேதாநுசார விரதாநுஷ்டானங்களுள் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவருமல்லரே. ஆயினும், அவரது வேதோபதேசம் முழுவதும் ஒத்திருக்கவில்லையே. ஆகையால் மதாநுசாரங்களை ஒற்றுமைப் படுத்திவைக்க நாம் அருகரல்லவென்பதை நம்மில் அநேகர் ஒப்புக்கொள்வார்களென்றும் அவ்வேதாநுசாரங்கள் நமக்கு வேண்டிய ஜனசாரச் சீர்திருத்தத்திற்குத் தடங்கல் இல்லையென்றும் நம்புகிறேன்.

இடைஞ்சலாயிருக்கின்றவை வேறென்னெனக் கேட்டாலோ? சொல்வேன், முதலாவது ஜாதிபேதம், இரண்டாவது பால்யவிவாகம், மூன்றாவது மகளிர் நிர்ப்பந்தம், நான்காவது மதுப்பழக்கம், ஐந்தாவது வீண்செலவு. இவற்றோடு இன்னும் பலவுண்டாயினும், நானோ மேற்சொன்ன ஐந்து அம்சங்களையே இன்றைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன் நல்லது இப்போது இவ்வைந்து பொருள்களின் மேல் எனதுவேலையைத்தொடங்குமுன், நான்சொல்லவந்த ஆசாரச் சீர்திருத்தம் என்பது நமது தற்கால ஜனசாரம் அல்லது ஒழுக்க முறைகளைக் காலவசதிக்கேற்றபடி திருத்திக்கொள்வது தான் என்றும் அவ்வாசாரம் காரணஆசாரம் மாமூல்ஆசாரம் என இருவகைப் படும் என்பதையும் இத்தகையாம் காரணமும் மாமூலும் எத்தேசத்தும் எத்திறத்தினரிடையும் இன்றைக்கும் இருந்துகொண்டுவருகின்றதென்பதையும், காரண ஆசாரத்தை எவராலும் கைநெகிழல்சாலா

தென்பதையும், ஆனால் காரணமில்லாத மாமூல்ஆசாரத்தையோ சமயம் வந்துழியெல்லாம் களைந்துவிட ஏலுமென்பதையும், இப்படியே ஒவ்வொரு ஜனசமூகத்தாரும் ஒவ்வொருதேசாபிமானிகளுஞ்செய்து தமது ஜனசமூகத்தையும் தேசத்தையும் முன்னேற்றற்கரும்பாடு பட்டு உழைத்துவருகிறார்களென்பதையும் தங்கள் காருண்யசமூகத்திற்கு ஒருசிறிது ஞாபகப்படுத்தி நான் எடுத்துக்கொண்ட அம்சங்களில் முதலாவதாகிய "ஜாதிபேதம்" என்பதைப்பற்றி ஆராய்வோம்.

கனவான்களே! ஜாதிபேதத்தில், முக்காலே மூன்றுமாகாணி மாமூல் ஆசாரத்தைத் துணைக்கொண்டதாயிருக்கிறது. ஆம் காரணமில்லாத இவ்வித்தியாசங்களைக் கருதும்போது நமது கண்களில் தண்ணீர் ததும்புகின்றது. இதற்கெல்லாம் இன்றைக்கு நம்மோடு ஒற்றித்துழைக்கும் நமது ஆரிய சகோதரர்களே காரணமென நம்மில் அநேகர் அபயமிடுகிறார்கள். ஆரியருக்குட் கிடந்த நான்கு வகுப்பை நமது திராவிடர்களுக்குள்ளும் நிலைநாட்டிவிட்டார்கள் என்கிறார்கள். நானேவென்றால், ஒன்றினை நான்காக்கிய காரணத்தை அவர்கள் சொல்லுகிறார்கள்; ஆனால் நான்கை நாலாயிரமாகச் செய்ததற்கும் நாலாயிரத்தை நாற்பதினாயிரமாகப் பலுகுவித்தற்கும் காரணம் நாமே கூறவேண்டியதென்கின்றேன். நான்கானபிரிவுகளாவன:— ஒவ்வொன்றும் தனக்கு ஏற்பட்ட எல்லைக்குள் நின்றிருந்தால் இது வரையும் அந்தநான்கும் நான்காகவே இருந்திருக்கும். ஒவ்வொரு பிரிவும் தனது எல்லைகடந்துசெய்த காரியங்களாலேயே நான்கு நாலாயிரமாக ஏற்பட்டுப்போயின. இன்னமும் பிரிவுகள்வரக் காத்துக்கொண்டிருக்கின்றன. அந்த முறைகேடானகாரியங்கள் இன்றைக்கும் நடந்துகொண்டேவருகின்றன. ஒருவன் தன்குலம்விட்டுமற்றொரு குலத்துப்பெண்ணைச் சேரவிரும்பும்போது அந்தச் சேர்க்கையாற் பிறக்கும் அருமைக்குழந்தையைத் தன் குலத்திற் சேர்த்துக்கொள்வது, அல்லது அப்பெண்ணின் குலத்திற் சேர்த்துவிடுவது என்பதைச் சரியாகத் தீர்மானஞ் செய்தபிற்பாடு, தான் நினைத்தகாரியத்தை நடத்திக்கொள்ளட்டுமேன். ஒருவிதத் தீர்மானத்திற்கும் அடக்கிவையாத அப்பிள்ளையைத் தகப்பன் தன்குலத்தான் என்று சொல்ல வெட்கப்படுகிறான். தாயும் தனதுகுலமெனச் சொல்லவழி

யில்லை. பிள்ளையின் கதியென்ன? பிள்ளையோ, தன் பிறப்பிற்கு வேறோர் பெயர்கொடுத்துத் தன்னைத் தனது தகப்பன் வழியும் தாய்வழியும் ஒப்புக்கொள்ளவியலாத ஓர் நூதன குலத்தோனாக்கிக் கொள்ளவேண்டியதுதான். இப்படியே ஜாதி பலவாயின. இந்த வகைகளினால் நமது ஜனசமூகத்தை இன்னமும் பிரித்துக்கொண்டு வருகிறவர்கள் கடவுள் முன்னிலையில் என்ன கணக்குச் சொல்லப் போகின்றார்களோ யான் அறியேன். நமது பாட்டன் பூட்டன் முதலியோரின் காரணத்தால் நேரிட்டுப்போன ஜாதிவித்தியாசத்தின் மட்டில் நாம் இப்போது செய்யவேண்டிய தென்னெனக்கேட்டால் எவர்கள் ஒழுக்கமுள்ளவரெனத் தெரிகிறாரோ அவர்களை யொப்புக் கொள்ளத் தயாராயிருக்கவேண்டும். எவர்கள் ஒழுங்கினரோ அவர்களை ஒழுக்கமுள்ளவரா யிருக்கப் படிப்பிக்கவேண்டும், ஒழுங்கினரைத் திருப்பமுயலுவதில் நாமே ஒழுங்கினராய்த் திரும்பிவிடாதபடி எச்சரிக்கையா யிருக்கவும் வேண்டும்.

மேலும் எவரிடத்திலும் நமக்கு மிகுந்த ஜீவகாருண்யமிருக்க வேண்டும். நமது ஜீவகாருண்யத்தைத் "திரான்ஸ்வால்" "மோரீஸ்" முதலியவிடங்களில் இருக்கும்இந்தியர்களுக்குக்காட்டுவதிலும் நமது வீட்டோரத்திலும் கிணற்றோரத்திலும் மிருகங்களைப் பார்க்கிலும் நீசத்தனமாகநடத்தப்படுகிற நமதுதேசவாசிகள் விஷயத்தில் பதின்மடங்கு காட்டவேண்டும். ஜீவகாருண்யத்திற்குப் பண்டைக்காலந் தொட்டே பரிசுபெற்றவர்களாகிய நாம் நமது சகோதரவாஞ்சையை விசாலிக்கச்செய்து சீரில்லாதவரைச் சீர்ப்படுத்திச் சமாதானக் கடவுளின்சமுகத்தில் சமசகோதரர்களாகிய நமக்குள் இருக்கும் காரணமில்லாத ஏற்றத்தாழ்வுகளை எந்தவகையும் பாராட்டாமல் சிற்சில வேளைகளில் நமது அந்தஸ்திற்சில பலிகொடுக்க வேண்டுமென்றாலுங் கூடப் பலிகொடுத்து எல்லாம் நமது ஜனோபகாரத்திற்காகவே தேசநன்மைக்காகவேயெனத் திருப்திப் படுத்திக்கொள்ள வேண்டியது.

இனி இரண்டாவதாக, பாலியவிவாகம். இந்தப் பாலிய விவாகத்தால் நமது ஜனசமூகத்திற்கு வருகிற அனர்த்தங்கள் பல. புராதன இந்தியாவில் இன்னணைய விவாகங்கள் நடக்கவில்லை யென்பதற்

குச் சீதை, திரௌபதை தமயந்தி முதலியவர்களின் சுயம்வரங்களும் சாட்சியாயிருக்கின்றன. பாலியவிவாகம் ஆரம்பித்ததெல்லாம் நமது பூர்வ அரசாட்சியையிழந்த சிலகாலங்களுக்குப்பின்னர்த்தான். நமது அரசாட்சியை யிழந்ததும் நம்மை ஆளவந்த துரைத்தனத்தார் எல்லாவித அவலட்சணமும் நிறைந்தவர்களாயிருந்தார்கள்; அவர்களது சேனுவீரர்களில் அநேகர் கலியாணம் பண்ணுதவர்களும் காமாதுரருமாயிருந்தார்கள். மேலும், நமது கன்னியர்களைப் பலாத்காரமாகச் சிறைபிடிப்பதே அவர்களது பிரதம வேலையாயிருந்தது. கன்னிகைகளையென்றேன்; ஆம், கலியாணமாகிய மங்கையர்களைக் கைவைக்க எத்தகையாங் கசடனும் பின்வாங்குவானன்ருே? ஒருவனுக்கு வதுவையான மங்கையை மற்ருெருவன் விரும்புதல் பாபத்திலும் பாவம் என்பதற்குத் திருக்குறளில் "பிறனில் விழையாமை" என்னும் அதிகாரமும் சாட்சிதருகின்றது. பிறனில்லைப்பற்றிச் சொன்ன வள்ளுவர் கன்னியர்காப்பினைப்பற்றி ஒன்றும் சொன்னுரில்லை.

கலியாணமாயின நங்கைகளின்மேல் வைத்திருந்த மதிப்பும் மரியாதையும் கன்னிகைகளில் எவருக்கும் இல்லாதிருந்ததுபற்றிக் கொடுங்கோல் அரசாட்சியுட்பட்டுக் குழம்பிக்கொண்டிருந்த நமது முன்னவர்கள் கன்னிகைகளைக் காப்பாற்றிக்கொள்ளக் கிஞ்சித்தும் வழியில்லாதிருந்தது. ஆகையால் பால்குடி மறவாத பாலைகளையெல்லாம் வதுவைக்குள்ளாக்கினுர்கள். இதுகாரணத்தைக்கொண்டு அந்நியர் சிறைபிடித்தலினின்று அநேக ஆயிரம் பெண்களை நமது பெரியவர்கள் காப்பாற்றினுர்களென்பது வாஸ்தவந்தான். ஆனல், அத்தகைய கொடுங்கோன்மையும் குரூரத்தனமும் இப்போது நம்மை ஆளும் காருண்யம்பொருந்திய பிரிட்டிஷ் அரசாட்சியில் இலவலேசமும் இல்லையே. அப்படியிருக்க, இப்போது நாமேன் வயது வராமுன்னர் நமது மக்களைச் சதிபதிகளாக்கவேண்டும்? நமது நாட்டின் பிற்போக்கிற்கு இலக்கான காரணங்களுள் பாலியவிவாகமும் ஒன்று என்பதை நம்மில் எல்லோரும் அறிவார்கள். பாலியவிவாகத்தால் மந்தபுத்தியும் அற்பாயுளும் கோழைத்தனமும் பலவீனதேகமுடைய பிள்ளைகள் உற்பத்தியாகின்றனர் என, வைத்திய சாஸ்திரிகள் எல்லோரும் ஒருங்கே ஓலமிடுகிருர்கள். உலகத்திற்

பலர், நம்மைப்பார்க்கிலும் பலவான்களும் புத்திமான்களுமாகக் காணப்படுகின்றதற்கு அவர்கள் பெற்றோர்கள் தக்க வயதுவந்ததற்குப்பின் வதுவைக்குள்ளானதே காரணமென அநேக ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆகையால், கனவான்களே! நமது பெண்கள் 15 வயதிற்குமுன்னும் ஆண்கள் 18 வயதிற்குமுன்னுமாவது கலியாணஞ்செய்யொணாதெனக் கட்டுப்படுத்த வேண்டும். பெண்களைப் பதினைந்து வயதுவரையும் வரனுக்குட்படுத்தாமல் வைக்கவாவெனப் பயப்பட வேண்டாம். தற்காலத்திய நமது நல்லரசாட்சியில் நமக்குநாமே தொந்தரவன்றி அந்நியரால் ஒரு தொந்தரவுமில்லை. ஆகையால், எத்தனை வயதுவரையும் நமது மக்கள் கலியாணமு மில்லாமல் அவர்களது கன்னிமையும் கெட்டுப்போகாமற் காப்பாற்றிவைக்கலாம். அதிலிருந்து பிறக்கப்போகிற பிள்ளைகளைப்பாருங்கள்; சாமுத்திரிகாலக்ஷணமும், சதாசாரமும் நிறைந்தவர்களுமாயிருப்பார்கள். சுவாதந்திரியத்தை ஸ்தாபித்த நமது துரைத்தனத்தாரின் போதனுமுறையில் நமக்குக் கிடைத்திருக்கும் புதுக்கிளர்ச்சிக்கு அன்னனையபிள்ளைகளே நமக்கு நிரம்பவும் வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

இனி, மூன்றாவதாக, மகளிர்நிர்ப்பந்தத்தைப்பற்றிச் சிறிதுசொல்லுகிறேன். நாகரீகமுள்ள தேசங்கள் பலவற்றில் அரசாட்சி முறையில் பெண்கள் பங்குகேட்கின்றனர். ஆனால் இன்னனைய நிர்வாக முறைகளில் இந்தியமகளிரும் சுதந்தரம்பெறவேண்டுமென்பது என் விருப்பமல்ல; நமது வீடுகளில் நமது பெண்களுக்கு இருக்கின்ற நிர்ப்பந்தம் அதிகமென்பதே எனது எண்ணம். பெண்களுக்குப் படிப்புவேண்டுமென்கிற ஆவசிகத்தை நம்மில் அநேகர் இன்னமும் அறியாதிருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயிக்கிற மணவாளர் விஷயத்தில் அப்பெண்களின் நோக்கத்தைக் கொஞ்சத்திற்குக் கொஞ்சமாகிலும் எதிர்பாராமல் செய்துவிடுகிறார்கள். ஸ்திரீகளைச் சிலபுருடர்கள் அடிமைகளாகவும் பிள்ளைப்பெற்றுக்கொடுக்கும் யந்திரமெனவும் நினைத்திருக்கிறார்கள்.

மகளிர் நிர்ப்பந்தம் எனப் பொதுப்பெயரிட்டு இவ்விஷயத்தை யான் அழைத்தேனாயினும் பெரும்பாலும், நம்தேசத்தைத் தமது துக்காக்கினியால் வேகவைத்துவரும் கைம்பெண்களின்பொருட்டுப் பேசுவதே இவ்வம்சத்தின் பிரதானவேலை. நமதுதேசத்தில் பத்து வயதுக்குட்பட்ட விதவைகள் இலட்சம்பெயர் இருக்கிறார்கள். 14-வயதுக்குட்பட்டவர்கள் 2-லட்சம், 19-வயதுக்குட்பட்டவர்கள் நான்கு இலட்சம்; ஆக இளங்கைப்பெண்கள் எழுநூறாயிரமாகிறார்கள்; இவ்வெழுநூறாயிரம் பெயருடையவும் பெருமூச்சுக்கு இலக்காயிருக்கும் நமதுதேசம் இராஜ்ஜியலட்சுமி வாழும் ஸ்தலமாயிருக்கக் கூடுமோ என்ன? இவர்களுடைய வயிற்றெரிச்சலும் மனோவேதனையும் தருவதற்கு இன்னும் நாமேதேனும் வழிசெய்யாதிருந்தால் தோஷமல்லவா? அக்காலத்தில் விதவைகள் உடன்கட்டையேறுதல் கொடிதென்றார்கள். நங்காலத்தில் அவர்கள்வேகாமல் வேகும் வெப்பம்பொருந்தியதுக்காக்கினியோ உடன்கட்டை நெருப்பைப்பார்க்கிலும் உக்கிரம் பொருந்திய நெருப்பென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

மேலும், ஒருத்திக்குச் சாபத்திலெல்லாம் கொடியசாபமென்னென்று கேட்டால் அவள் தனது காணக்கூடிய கடவுளாயிருந்த கணவனைக் கைநெகிழ்ந்ததேயொழிய வேறில்லை. இதுவொன்றே தனது ஜீவியகாலத்தின் முக்காலே மும்மாகாணிச்சீரையும் சிறப்பையும் கொன்றுவிட்டது.

இப்படியிருக்கும் நமது விதவாசகோதரிகளை எவ்வளவோ இரக்கத்துடனும் தயாளத்துவத்தோடும் பராமரிக்கவேண்டியதிருக்க, அவர்களுடைய சுத்தமான உடுப்புக்களைப் பிடுங்கிக்கொண்டும் அங்நியர் கைபட்டறியாத அவர்களது தலைமயிரை அம்பட்டனைக் கொண்டு சிறைப்பித்தும் ஒருவேளைச்சோறும் ஒருவேளைப்பலகாரமுமாக வருத்தப்படுத்தியும் இதுபோன்ற நிர்ப்பந்த கிலேசங்களுக்கெல்லாம் ஆளாக்குவதும் நியாயமல்லவே. இதுவிஷயத்தில் நாமிப்போது செய்யவேண்டியதெல்லாம் நம்மிடையில் ஆங்காங்கு ஒன்றிரண்டாய் நடந்துகொண்டுவரும் விதவாவிவாகத்தை ஆயிரமாயிரமாக நடத்திக்கொண்டுவர ஏற்பாடுசெய்யவேண்டும். இந்தவித ஏற்பாட்

4

டினல், விதவைகள் செய்துவரும் நமது ஜாதியத்திற்குக் கேவலமான முறைகேடான காரியங்களை ஒருவாறு மட்டுப்படுத்த வழியுண்டாகும். பொதுவாக மகளிர் விஷயங்களில் நாம் கூடியபட்டும் சுவாதீனம் கொடுத்து,மகம்மதியர் அரசாட்சியிலிருந்து நமது பெண்கள் இழந்துபோன சுதந்தரங்களில் திரும்பவும் அவர்கள் பங்குபெறச் செய்வது நம்பேரிற் சுமந்தகடன். நாம் உலகநன்மையின் பொருட்டு என்ன செய்கிறேம் என்பதை அன்னார் அறியவும் அறிந்ததைச்செய்யத் தூண்டும்பொருட்டும் இன்னனைய நல்லவைக் களங்களுக்கு அவர்களையும் வரவேற்று அவர்கள் முன்னிலையில் நமது பொதுக்காரியங்களை நிறைவேற்றுவதும் நமது மேலான நோக்கமாயிருத்தல் வேண்டும்.

நான்காவது அம்சமாகிய மதுப்பழக்கத்தைப்பற்றிச்சொல்லவேண்டிய நேரமிது. சகோதரர்களே! நமது நவீன நாகரீகத்தில் மதுப்பழக்கமென்பதொன்று தலையெடுத்துவருகிறது. ஏது, இது சிலவேளை இன்னும் கொஞ்சக்காலத்தில் நமதுநாட்டையே முழுவதும் விழுங்கிவிடும்போல் தோன்றுகிறது. ஆதிகாலத்தில் இதைக், கேவலம் கீழ்மக்களே பாவித்துக்கொண்டுவந்தார்கள். ஆனல் இக்காலத்திலோ உயர்குலமென்னப்பட்டவர் முதலாக அப்பாழும் பானத்தைக் கொண்டாடிவருகிறதாகத் தெரிகிறது. இதுபற்றித்தான் நம்மிந்திய மந்திரியாகிய மார்லிபிரபு சமீபத்தில், நிமிஷத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களைச் சூறையாடிக்கொண்டிருக்கும் "பிளேக்" என்ற கொள்ளைவியாதிக்கு இந்தியர் வெகுவாய்ப் பயப்படுகின்றார்கள்; ஆனல் நானே வென்றால் அரைநிமிஷத்தில் ஆயிரக்கணக்கான அனர்த்தங்களைப்புரிந்து கொண்டுவரும் மற்றொரு ரோகத்தை இக்காலத்திய நூதன இந்தியாவிற் கண்டு நடுங்குகிறேன்; அது மதுபானப்பழக்கமே என்கிறார்.

கனவான்களே! ஒருவர் மதுவுண்ணத் தொடங்கினலே போதும். இனி அவனது கெடுதிக்கு வேறுஜோசியம் கேட்கத் தேவையில்லை. மதுபானத்தைத், தொட்டது வாஸ்தவமேயென்றால் அதைத்தொட்டவன் கெட்டதும் வாஸ்தவமேயாம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய "ரசெல்" என்பவர் உலகமே! நீ மது

பானத்தைக் கீழ்ப்படுத்து. அல்லாதுபோனால் மதுபானம் உன்னைக் கீழ்ப்படுத்தி விடுமென்று சொல்லுகிறார். "மதுபானத்தைப் பாஷாணமென்கிறார்கள் அநேகர்; அவர் அறியாதார்; மதுபானம் இவ்வுலகத்திற் பிறக்கிறகாலத்தில் நான் ஈங்கு இருந்திருப்பனேயாகில் நீசபானமாகிய அதற்குப் பாஷாணமென்றல்ல வேதாளமென்றே பெயர்கொடுத்திருப்பேன் என்கிறார். "ஷேக்ஸ்பீயர்" என்னும் பிரபலவித்வான். குடியினால்வரும் தீங்குகளுக்கு ஒருவன் வியாசங்கேட்கத் தேவையில்லை; புஸ்தகம்வாசிக்கத்தேவையில்லை; குடியன் ஒருவனது ஜீவியகாலத்தை ஆரம்பமுதல் கடைசிவரையும் கவனித்துவருவதே போதுமானது. அவன் மதுப்பழக்கத்தைத் தொடங்குங்கால் எப்படியிருந்தான், கொஞ்சக்காலத்திற்குள் எப்படி ஆகிறான், இப்போது எப்படியிருக்கிறான் என்று கண்கூடாகக்கண்டு கொள்ளலாம்.

மதுவை மருந்திற்காக உபயோகிக்கிறார்கள் சிலர். எந்த வியாதியை நிவிர்த்திபண்ணுவதற்காக இம்மதுபானத்தைத் தொடங்கினார்களோ அவ்வியாதிக்கு இம்மதுபானத்தைப் பார்க்கிலு மலிந்தவிலைக்கு வேறுமருந்துகள் சுலபமாகக்கிடைத்துக்கொண்டு வரும் இக்காலத்தில், அதிகவிலைகொடுத்து மதுபானத்தை வாங்குவானேன் என்று இவ்விஷயத்தில் எனக்கோர் கேள்வியும், இஃதோடு வியாதி தீர்ந்ததும் மருந்தாக உபயோகித்துக்கொண்டுவரும் மதுப் பழக்கத்தை உடனே நிறுத்தாதொழிவானேன் என்னும் மற்றொரு வினாவும் உதிக்கின்றன. எவர் எப்படிச்சொன்னாலும் அநேக வயித்தியசிரேஷ்டர்களின் ஆதாரங்களைக்கொண்டு நான் அறைவதேதென்றால், யார், மலிந்தவிலையில் கைகண்டமருந்துகள் அநேகமிருக்க கேவலம் மதுபானத்தை மருந்தாக உபயோகிக்கச் சொல்கின்றனரோ அவர் வயித்திய சாஸ்திரத்தில் கைதேர்ந்தவரல்லவென்றே யான் சொல்லவேண்டியிருக்கிறது. மதுபானப் பழக்கத்திற்குக் கிறீஸ்து வேதம் பரவுதலே காரணமென எங்கள்மேல் பழிசுமத்துகிறார்கள் சிலர். கிறீஸ்துவேதம் இந்நாட்டிற்குவரா முன்னமே மதுப்பழக்கம் ஈங்குநடமாடிக் கொண்டிருந்ததற்கு அநேக சாட்சிகளிருக்கின்றன. இஃதெப்படியாயினும் ஆகுக.

மதுப்பழக்கம் ஜனசமூக அபிவிர்த்திக்கு முழுதுமே இடைஞ்சல் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. இப்பழக்கத்தைத் தொலைக்க மேனாடுகளில் அநேகபிரயத்தனங்கள் செய்யப்பட்டுவருகின்றன. நமதுநாட்டிலும் தற்போதுசில சங்கங்கள் தலைப்பட்டிருக்கின்றன. என்றாலும் மதுப்பழக்கம் விருத்தியாகிக்கொண்டுவரும் தீவிரத்திற்கு இச்சங்கங்கள் செய்துகொண்டுவரும் வேலைபோதாது. ஆகையால் கூடியசீக்கிரம் இக்கொடிய பழக்கத்தை வேரோடறுத்தெறிய நாமெல்லோரும் முற்படவேண்டும். இனிக்கடைசி அம்சமாகிய வீண்செலவு என்பதையிட்டு விளம்புவோம்.

ஒருதேசத்தை மென்மேலும் க்ஷீணதிசைக்குக் கொண்டுவருதல் அத்தேச வாசிகளின் வரவுக்குமிஞ்சிய செலவுமாத்திரமல்ல தேவைக்கு மிகுந்தசெலவுமாதல்பற்றி இந்த அம்சத்திற்கு வீண் செலவு அதாவது தேவைக்குமிஞ்சிய செலவு என்று சொல்லநேர்ந்தது. நமது இராஜப்பிரதிநிதியாயிருந்த கர்சன்பிரபு ஒருநாள் சென்னைக்கு விஜயமானபோது சென்னை ஜனசமூகத்தார் வாசித்துக்கொடுத்த மனுவில் வரிப்பளுவைக் குறைக்கவேண்டுமென்று கேட்டதற்கு மறுமொழியாக அவர் "உங்கள் நன்மை தின்மைகளில் நீங்கள் செய்கிற வீண்செலவுகளைப்பார்க்கிலும் இராஜாங்கத்தார் அதிகப்பளுவை உங்கள்மேல் சுமத்தவில்லையென்றெண்ணுகிறேனென்று சொன்னது இப்போது என் ஞாபகத்துக்குவருகிறது. மேனாட்டில் ஜெர்மானியரும் கீழ்நாட்டில் ஜப்பானியரும் வர்த்தகவல்லாண்மையில் முன்னிற்பதற்கு அவர்களிடத்தில் அளவுக்கு மிஞ்சிய செலவில்லாததே காரணம்.

வீண்செலவு செய்யும் ஒருவனிடத்தில் அகங்காரம் கோபம், மடமை, அசத்தியம், அநீதம், ஆகிய இந்தத் துர்க்குணங்களும் இல்லாமல் முடியாது ஏனெனில் இக்குணங்கள் வீண்செலவின் சகோதரகுணங்கள். எவனிடத்தில் வீண்செலவில்லையோ அவ்னிடத்தில் அமைதி, பொறுமை, அறிவு, சத்தியம், நீதி இவைகளும் குடிகொண்டிருக்கும். ஏனெனில் இக்குணங்களின்முன் வீண்செலவு தலையெடாது. சகோதரர்களே! நமதுதேசவாசிகளில் அநேகர் நமது முன்னேற்றத்தை நோக்கி வேலைசெய்துகொண்டுவருகிறார்

கள் ; அவ்வேலைகளுக்கெல்லாம் தொட்டதற்கும் பட்டதற்கும் இப்போது பணமே வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க மேற்சொன்ன வீண்செயல்காரணமாக வந்ததையெல்லாம் விரயஞ்செய்துவிடுவோமேயானால் நாம் தொட்டுநடாத்தும் வேலையின்கதி என்னவாகும்.

நமதுகதிதான் என்னமாய்ப் போகுமென்று நினைக்கிறீர்கள். இதுவிஷயத்தை நம்மைப்பார்க்கிலும் நமதுபெண்பகுதியாரே அதிகமாகக்கவனிக்கவேண்டியது. ஏனென்றால், அவர்களே மானிடஜென்மத்திற்கு உடையேற்பட்டதெல்லாம் நிர்வாணத்தை மூடிக்கொள்வதற்கும் குளிர் வெப்பம் தாங்குவதற்குமே யென்பதையுணராமல், நாம்சேர்த்துவைக்கும் திரவியத்தை பட்டென்ன பீதாம்பரமென்ன இவைகளில் விரயமாக்குகிறவர்கள். இரண்டொரு ரூபாவில் முடிவாகிப் போகிறகலியாண முதலிய உற்சவங்களை நாம் அவர்களுடைய பவிசுக்கும் சொகுசுக்குமாகவே இரண்டாயிரம் மூவாயிரம்வரை செலவழித்துத் திக்குமுக்காடுகிறோம். மேலும், உலகத்தில் எல்லாவிதமான பயித்தியத்திற்கும் மருந்திருக்கிறது. ஆனால் நமதுபெண்மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நகைப்பயித்தியத்திறகோ நம்மொருவரிடத்திலும் மருந்தில்லாமற்போனது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

நகை அழகுக்காக ஏற்பட்டதென்று சிலர்சாதிக்கிறார்கள். இதுதான் அழகு, இன்னநகைதான் சிறப்பு என்று இதுவரையொன்றும் தீர்மானப்படவில்லையாகச்சே அழகிற்காக நகையேற்பட்டதென்பதில் எனக்குவிசுவாசமில்லை. நம்மிடையில் நகைவந்ததற்கு நம்மைப் பார்க்கிலும் நம்மை ஆண்டுவந்த மகம்மதியர்களே காரணமாயிருக்கிறார்கள். இதற்கு இன்றைக்கும் நம்மில் வூடாடும் நகைகள் அநேகமாய் இந்துஸ்தான் பெயர்கொண்டிருப்பதே சாட்சி.

சகோதரர்களே! நமது சுய அரசாட்சியை இழந்து ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பல்வேறு அரசாட்சிகளால் நமது முன்னோர்கள் நெருக்கப்பட்டார்கள். அநேக தினங்களிற் காலையில் ஓர் அரசாட்சியும் மாலையிலோர் அரசாட்சியுமாக விருந்தது. இன்னும் கொஞ்சநேரத்தில் எந்த அரசாட்சி வரப்போகிறதோ வென அவர்களுக்குத் தெரியாததால் அரசாட்சியாரின் நாணயங்கள்பேல் நம் முந்தையோருக்கு நம்பிக்கையில்லாமற் போனது. வாழையடி

வாழையாய் வசித்துவந்த இல்லிடங்களை முதலாகச் சிலவேளைகளில் இழக்கவேண்டி யிருந்ததால் தமது கையிலுள்ள திரவியத்தைக் கொண்டு நிலங்கரைவாங்குவதும் நியாயமில்லாமல் தீர்ந்தது. நாணயமாக வைத்திருந்தாலோ காலையிற் செல்மணியாயிருந்த நாணயம் மாலையிற் செலாமணியாயது. ஆகவே, நம்முன்னோர்கள் என்னசெய்தார்கள் என்றால், அவையனைத்தையும் வார்த்தோ உருக்கியோ காதிலும் கழுத்திலும் கள்ளங்கபடில்லாமல் அணிந்துகொண்டார்கள் காலாந்தரத்தில் இது அநுசாரத்திற்கு வந்தது. இதுவே, நம்மிடையில் வழங்கிய நாணயங்களிற் பல நகையாய் மாறிய வரலாறு. இதற்குமுன் நகையில்லையோ வென்பார்க்கு நகைக்காக நாணயத்தை ஒருக்காலும் உருக்கியதில்லையென நாணயமாகச் சொல்லுகிறேன்.

இப்படித்தோன்றி, இப்போது இந்தியாவிலிருக்கும் நகைகளையெல்லாம் விற்றால் நாம்வசித்துவரும் இவ்விந்தியாவைப்போல இன்னொரு இந்தியா வாங்கலாமென்பது பொய்யல்ல. ஆகவே, இவ்விந்தியாவைக்கொண்டு நமது அரசாட்சியாருக்குக் கிடைக்கிற வரும்படி நமது நகைகளைக்கொண்டு நமக்குக் கிடைக்கக்கூடுமானதென்று சொல்லுதல் நிரம்பவும் பொருந்தும். ஆகையால், இப்பெருத்த வரும்படியைத் தனியே நகையின்மூலமாய் இழந்துகொண்டுவருகிற நாம் மற்ற வீண் செலவுகளின் வழியாயும் அநேகமான திரவியங்களைப் போக்கடித்துக்கொண்டு வருதல் ஒழுங்கல்ல என்பதே நான் இப்போது சொல்லவந்தது; நல்லது போனதுபோகட்டும்; இனியாவது நமது வீண்செலவுகளையிட்டு நாம் எச்சரிக்கையா யிருக்கவேண்டுமென்பது இவ்வம்சத்தின் தீர்மானம்.

எடுத்துக்கொண்ட ஐந்து அம்சங்களையும் இயன்றவரை ஒருவாறுகூறிமுடித்தேன். இதற்கு விஸ்தாரமான ஓர் முடிவுரை கூறவேண்டும். எளியேன்மேற் கிருபைகூர்ந்து இவ்வளவு சாவதானமாகக்கேட்டுக்கொண்டதே நிரம்பவும் போதுமானது. தங்கள் காருண்ய சமூகங்களை இன்னமும் என்பால் தாமதிக்கவைப்பது மிகவும் அநுசிதமான காரியம். ஆகையால், கனவான்களே! இறுதியாய் நான் இன்னும் இரண்டொருவார்த்தையிற் கேட்டுக்கொள்வதேதென்றால் தேசங்களெல்லாம் ஆவலுடனும் ஆர்ப்பரிப்போடும் முன்னேறிக்கொண்டு

போகின்றன. போகும் வழியில் தட்டுப்படக்கூடிய பெருந்தடைகளைப்பொருட்படுத்தாமலோ உடைத்தெறிந்தோ செல்லுகின்றன. தமது குறிப்பையும் நன்னோக்கத்தையும் விட்டு அப்புறம் இப்புறம் ஒதுங்காமல் ஒரேமுகமாக நடந்துபோகின்றன. அநேகந்தடவைகளில் அவைகள் சித்திபெறுகின்றன. ஏதோ நமது இந்தியாவும் அவ்வத் தேசங்களைக் கண்டுபாவிக்கக் கங்கணங்கட்டி முன்னிற்பதுபோலத் தெரிகிறது. கொடுங்கோல் அரசாட்சிகளில் நெடுங்காலம் இருந்துவிட்டதால் நம் பூர்வசங்கடத்தின் காரணம் நமக்கு மழைவிட்டும் தூவான் விடவில்லை யென்றதுபோல் இருக்கிறது. நமது தற்காலத்திய அரசாட்சியோ காருண்யம்பொருந்திய பிரிட்டிஷ் அரசாட்சி. நமது எல்லாவிதச் செல்வங்களையும் இந்த நல்லரசாட்சியிடத்தேயே நாம் பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கு மேற்சொன்ன ஜாதிவித்தியாசமுதல் வீண்செலவு வரையுமுள்ள காரியாட்சங்கள் போன்றவையே பல்காலும் தடையாயிருக்கின்றன. அவ்விடைஞ்சல்களைக் கூடியவண்ணம் விலக்கவேண்டியதே நமது தற்காலத்திய பிரதானவேலை. ஆகையால் எவ்வளவுதூரம் நமது புராதன ஆசாரங்களை ஒதுக்கவேண்டுமோ அவ்வளவுதூரம் ஒதுக்கிவைத்துங் காரண ஆசாரத்திற் சிறிதும் வடுப்படவிடாமலும் மேற்சொன்ன விக்கினங்களுக்கும் இன்னும் இவைபோலொத்த மற்றைத்தடங்கல்களுக்கும்இலக்காகாத சீர்திருத்தமொன்றைக் கைக்கொண்டு அன்னனைய ஆசாரச்சீர்திருத்தத்தால் நமது ஜனசமூகத்தை ஈடேற்றுவோமாக; ஈஸ்வரனும் இதற்கு இணங்குவானென்பதே எனது துணிபு.

---

உ

திருச்சிற்றம்பலம்

# சோடசகலா பிராசாதயோகம்

## முன்னுரை

சிவபெருமானது பஞ்சாக்ஷரமஹிமையைக்கூறும் யோகநூல்களில் திரிகலா, பஞ்சகலா, அஷ்டகலா, நவகலா, துவாதசகலா, ஷோடசகலா பேதங்கள் ஏற்பட்டிருப்பது அறிஞர்பலர் அறிந்த

விஷயம்: அதனுட்கடைசியான ஷோடசகலா பிராசாதயோகத்தைப், பிராசாதமென் றங்கூறுவதுண்டு. ஞானமிர்தத்தின்கண் பாயிரம் கடைசி அடியில் அதன் உரையாசிரியர் 'உன்மனாந்த' மெனச்சுட்டிப் போந்ததற்குப், பதிப்பாசிரியரான சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள், தங்குறிப்பில் ஷோடச கலைகளிவையென்றும், அதன் விரிவை பௌஷ்கரத்திற் காண்கவெனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பௌஷ்காம் சம்ஸ்கிருதம் கற்றாருக்கே பயன்படுவதன்றி ஏனையோருக்குப் பயன்படாமையானும், அதன் தமிழ்ப்பிரதியொன்று எம்மிடம் இருந்ததைப் பலருங்கண்டுகளிக்குமாறு, தரங்கன்பாடியிலிருக்குஞ்சங்கவித்துவான் ஸ்ரீ-ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களுடன் சோதித்துச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடலானேன்.

௨

# நூல்

## காப்பு

அருள்வளர் தில்லை மூதூ ரழகிய மன்று ளாடன்
மருவிய பெருமா னீன்ற மழவிளங் களிறு காப்ப
விரவிய சிவாக மத்தின் விதிவழி கலையீ ரெட்டுந்
திருமலி தமிழி னாலே தெரிந்துரை செப்ப லுற்றாம். (க)

மேதையருக் கீசம்விட கலைமேல் விந்து
விரவுமர்த்த சந்திரன்மேல் நிரோதி நாத
மோதியநா தாந்தமொடு சத்திவியா பினியே
யுயர்சமனை யுன்மனைபன் னிருகலையா யோங்கு
மீதிலகு சமனைக்கும் வியாபினிக்கும் நடுவே
வியோமரூ பிணியநந்தை யனாதையனா சிருதை
யேதமற வேபொருந்திக் கலைபதினா றாகு
மீசனணி யம்பலத்தா னிணையடிக்கீ ழிவையே. (௨)

முன்னுரைத்த பன்னிரண்டு மாத்திரைகள் பெறுங்கால்
மூன்றாகு மேதையிரண் டருக்கீச முறையே

பன்னும்விட கலையொன்றும் விந்துவின்பா லரையாம்
பரவுமர்த்த சந்திரன்கால் நிரோதிபடு மரைக்கா
லுன்னியமா காணிபெறு நாதநா தாந்த
மொருபதுமுந் திரையைந்து சத்திவியா பினியா
மன்னுமிரண் டரைசமனை யொன்றே காலுன்
மனைமனமாத் திரையிவைகள் வருங்கோட கலைக்கே. (௩)

மூலமுதல் நாபியந்தங் கோடகலை நாபி
முதலிதையாந் தம்மேதை யிதயமுதற் கண்டத்
தேலுமருக் கிசம்விடங் கண்டமுதற் றாலு
விரந்தாத்துட் புருவநடு விந்துநடு முதலாச்
சால்பிரம ரந்திரமட் டர்த்தசந்திரன் நிரோதி
தகுநாத நாதாந்தந் தானுகு மிவைமேற்
கோலமுதற் றுவாதசாந் தத்தளவுஞ் சத்தி
குலவும்வியா பினிசமனை யுன்மனையுங் குறிப்பாம். (௪)

பண்புறுமூ லாதார முதல்நாபி யந்தம்
பயில்கோட கலைத்தானம் பன்னிரண்டங் குலமே
நண்புதரு நாபிமுத லிதையாந்த மேதை
நவிலுவிரற் பன்னிரண்டா நல்லிதைய முதலாக்
கண்டாந்த மருக்கிச மங்குலமேழ் காட்டுங்
கண்டமுதற் றாலுவிரந் திரவந்தங் காணிற்
கொண்டவிட கலைத்தான மங்குலநா லாகுங்
கொடும்புருவ நடுவிந்துத் தானமோரங் குலமே. (௫)

புருவநடு முதற்பிரம ரந்திர மட்டாகப்
பொருந்துமர்த்த சந்திரனே முதற்புகல்நா லினுக்கும்
பெருகிடுமொவ் வொன்றுக்கு மும்மூன் றாகப்
பேசும்விரற் பன்னிரண்டாம் பிரமரந் திரத்துக்
குரியசத்தி யங்குலமொன் றுயர்ந்தவியா பினிக்கா
மொருமூன்று சமனைக்கு மொருநான்குன் மனைக்கே

வருநான்கங் குலமாகத் தானமிவை யொன்பான்
மதித்திடு மங்குலமறுபான் வழுத்துங் காலே. (௬)

மேதைமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
விந்துமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நாதமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நண்ணும்வியா பினிக்குமொன்று நான்காவ திதுவே
யோதுசம னைக்குரிய சூனியமொன் றாகு
முரைப்பதுமைந் தாவதெனு முன்மனைக்கு மொன்றும்
பேதமறு சூனியமா றாகுமதன் மீதே
பெரியபர மிருக்குமெனப் பேசுவர்நல் லோரே. (௭)

மிருமகரத் தோடுகர மகாரம் வட்டம்
வெண்மதியி னொருபாதி திரிகோண மிவைமேற்
பகருமிரு மருங்குசுழி நடுக்கலப்பை யொன்று
பயில்வலத்து விந்துவொரு கலப்பைப்பா லொன்றும்
நிகரில்விந்து விடம்படைத்த நல்வலமு மொன்றே
நிலையில்வலம் படைத்தவிந்து திரிசூல நிகழுந்
திகழுமிரு விந்துநடு விரண்டு ரேகை
செறிகுடிலங் கலைவடிவந் தெரிபன்னிரண் டினுக்கே. (௮)

செங்கமலத் தயன்மேதைக் கருக்கீச கலைக்குத்
திருமாலாம் விடகலைக்குத் தெய்வ முருத்திரனும்
பங்கமிலா விந்துவுக்கு மகேசுரனே யாகும்
பரவுமர்த்த சந்திரனே முதற்புகல்நா லினுக்குந்
தங்குசதா சிவன்றெய்வஞ் சத்திமுத லாகத்
தருங்கலைக்குச் சிவனெனவே சாற்றுவர்நல் லறிஞர்
மங்குல்படி பொன்முகட்டு மணிமாடஞ் செறியு
மன்றுடையான் நின்றதிரு மலரடிக்கீ ழிவையே. (௯)

மண்முதலாய்ப் பிரகிருதி பரியந்த மேதை
வருமருக்கீ சம்படரு மாயைதவி ராறி

லெண்ணுமிட கலைமாயை பொருந்தியிடும் விந்து
விலகுசுத்த வித்தையுட னீச்சுரமட் டிருக்கும்
நண்ணுமர்த்த சந்திரனே முதலொருநான் கினுக்கு
நாட்டுசதா சிவஞ்சத்தி சத்திமுதல் நான்காங்
கண்ணுகலை நாலினுக்குஞ் சிவதிறந்தத் துவமாங்
கனகமணி யம்பலத்தான் கழலிணைக்கீ ழிவையே. (கo)

சொரிதழலொன் றிந்திரவி கூடுமொளி யொன்று
தோன்றிய மின்னொளியொன்று சுடர்த்தீப மொன்று
பரவியவா ளொளியொன்று பிறைநிறமொன் றாகும்
படர்நாத மாணிக்க வொளியொன்று பார்க்கில்
வருமிரண்டு மின்னொளியாம் நாதாந்த மொன்று
வருமிரவி நூறுசத்தி வியாபினியா யிரமா
மருள்சமனை யொருகோடி யாதவர்போ லெரிக்கு
மனந்தகூ ரியரொளிபோ லணிதருமுன் மனையே. (கக)

விளங்குகலைக் காரியங்க ளத்தனையு மின்றும்
வியோமரூ பிணியநந்தை யனாதையனா சிருதை
வளங்குலவு வடிவிந்து நான்கினுக்கு மொக்கும்
வழுத்தியனா தைகாயம் வளர்ஞான வாரி
துளங்கிய சின்மயவாடி தூயமதி கோடி
சோதியிவை தியானமென வுன்மனைக்குச் சொல்வாம்
களங்கச மனந்தமலந் துவா தசாந்தத் தளவுங்
கருதுநிரா தாரமா முன்மனையுங் கடந்தே. (கஉ)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

# தருக்க சூத்திர பரீக்ஷை

தருக்கசூத்திரம் என்பது தருக்க விஷயத்தைச் சுருக்கமாய சொற்களாலே விளக்குஞ் சூத்திரவடிவமான ஒருநூல் எனப்பொருள் படும். தருக்கம் என்பது சாத்திரவிரோதமின்றிப் பொருள்களை நிச்சயிப்பது எனப் பொருள்படும். சூத்திரம் என்பது சொற்பொருள் களை சுருக்கமுறத் தன்மாட்டுப் பிணித்திருப்பது எனப் பொருள் படும். இது தமிழ்ப்பாஷையில் "நூற்பா" என்று வழங்கப்படும். பரீக்ஷை என்பது குணங்களையுங் குற்றங்களையும் ஆராய்வது எனப் பொருள்படும். இவைகொண்டு "தருக்கசூத்திர பரீக்ஷை" என்ப தற்குப் பொருளுரைத்துக்கொள்ளுக.

வடமொழியிலுள்ள தருக்கம், வியாகரணம் முதலிய சாத்திரங் களெல்லாம் சூத்திரரூபமாகவே செய்யப்பட்டிருக்கின்றன. செய்து வைத்த அறிஞர்களும் சாமானிய புருடரல்லர்; பின் யாவரோ வெனின்; தவத்தான் மனந்தூயராய் முக்குணமுங் கடந்து இறைவ னருள் பெற்று முறையறிந்தொழுகும் முனிவர் முதலிய புண்ணிய புருடர்கள். அவர் சூத்திரங்களெல்லாம் அரிதுணர்தற்பாலன. மந்தபுத்திமான்களால் ஒருகாலும் உணரப்படா. சொற்பொருட் சுருக்கமுந் திட்பநுட்பங்களுஞ் சூத்திரத்திற்போல மற்றொன்றில் அமைவதில்லை. தென்மொழியிலே சூத்திரரூபமாகச் செய்யப்பட் டிருக்கும் நூல்கள்பெரும்பாலும் இலக்கணநூல்களேயாம். அவை:- நன்னூல், தொல்காப்பியம் முதலியன. சித்தாந்த நூல்களுள்ளே சிவஞான போதமுஞ் சூத்திரவடிவமாகச் செய்யப்பட்டிருக்கின் றன. இன்னுஞ் சிலவுள.

இச்சூத்திரங்களையெல்லாம் கற்றுணர்தற்கஞ்சிய இக்காலமாண வர்களுள்ளே சிலர், சூத்திரவடிவமாயுள்ள நூல்களெல்லாம் அறிதற் கரிய கர்க்கசம் என்றும் அவற்றாற் பயனில்லை என்றும், அவையெல் லாம் வசனரூபமாயிருத்தல் வேண்டும் என்றும் வாதிப்பர். இவர் கூறும் வார்த்தைகளும் இணங்குமா? இவரெல்லாம் இவ்வாறுரைய

சூத்திரங்களைப் பிரயாசமுற்றேனும் படித்துக்கொண்டால் என்னை? படித்துக்கொள்ளுதல் அருஞ்செயலா? பண்டுள்ளார் பலர் படித்துக்கொள்ளவில்லையா? பயனடையவில்லையா? பழித்ததும் உண்டா? எத்தனையோ வாக்கியங்களிலே விஸ்தாரமாக எழுதவேண்டிய பரந்த பொருள்களெல்லாம் எழுத்துக்களாற் சுருங்கிய ஒரு சிறு சூத்திரதில் அடங்குகின்றனவல்லவா? சூத்திரம்போலச் சொற்பொருள்களைச் சுருக்கி விளக்குதற்கும், விரைந்து பாடம்பண்ணி நினைந்திருத்தற்கும், விவேகத்தை விளக்குதற்கும் வசனமும் வாய்ப்புடையதாகுமா? ஒரு சிறு சூத்திரத்தை வசனமாக வரைதற்கு ஒன்பது பக்கம் வேண்டாமா? ஒன்பது பக்கஞ்சென்றாலும் அவையெல்லாம் அச்சூத்திரம்போல அறிஞர்க்குச்சுவைக்குமா? ஆராய்ந்து வாதிக்க.

தென்மொழியிலுள்ள தருக்க நூல்களுள்ளுஞ் சூத்திரவடிவமாய ஒரு நூலிருக்கின்றது. இது செய்தார் அகத்தியர் என்பர். இதன் பெயர் "தருக்கசூத்திரம்" என்பது. இது தருக்கபரிபாஷையின் முகத்தும் வேறிடத்தும் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதிலே அகப்பட்டதும் இருபது சூத்திரம் மாத்திரமாம். இதனை யாமும் படித்துப் பார்த்தோம். யாவருந் தருக்கவிஷயத்தைச் சுருக்கமாய் மனனஞ்செய்து மனத்திலே வைத்திருத்தற்கு வாய்ப்புடையது.

இத் தருக்கசூத்திரம் பிராசீன தருக்கமன்று. நவீன தருக்கம் என்றே நாம் கொள்ளுகின்றாம். நவீன தர்க்கநூலாகிய தருக்க சங்கிரகம் முதலியனபோலத் திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் என்னும் ஏழு பதார்த்தங்களையுங் கூறுகின்றது

### சூத்திரம்

பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
இன்மை யுடன்பொரு ளேழென மொழிப.

இச்சூத்திரத்திலே திரவியம், குணம் முதலிய ஏழுபதார்த்தங்களும் முறையே சொல்லப்பட்டிருத்தல் அறிக. மற்றைச் சூத்திரங்

களிலும் தர்க்க சங்கிரகத்திற் கூறிய விஷயங்களே கூறப்பட்டிருக்கின்றன. சில சூத்திரங்களிலே சிலபாகங்கள் வேறுபட்டனபோலவுங் காணப்படுகின்றன. மூன்றுஞ் சூத்திரத்திலே சிக்கெனவோசை என்பது சிக்கெனலோசை என வேறாயிற்று. சிக்கெனவு - இறுகிய சம்பந்தம்; சிநேகம் என்றவாறு.

நீர்

நீரிறை வரைப்பின் கட்டுநீ ருடம்பு
சுவைத்திறங் கவர்வது நாவி நுனியே.
கடல்யா றுதி விடைய மாகும்,

நீருடம்பு நீரிறை வரைப்பின் கட்டு=நீருக்குச் சரீரம் வருண லோகத்தின் கண்ணது. வரைப்பு=இடம். கட்டு என்பது கண் என்னும் சினையடியாற் பிறந்த குறிப்புவினைமுற்று. இப்பொருளுடைய "வரைப்பின்கட்டு" என்பது இதன் பின்வருஞ் சூத்திரங்களிரண்டிலும் "வரைப்பிற்கட்டு" என வேறுபட்டுப்போயிற்று.

காலம்

இறப்புமுதல் வழக்கிற் கேது காலம்,

இச்சூத்திரத்திற் சொல்லப்பட்டது "காலமாவது இறப்பு முதலிய வழக்கிற்கு ஏதுவாயிருப்பது" என்று தருக்க சங்கிரகத்திற் சொல்லப்பட்ட காலத்தி னிலக்கணமேயாம். இதில் காலம் என்பது எழுவாய். ஏது என்பது பயனிலை. ஆதலின் "ஏதுக்காலம்" என அச்சிற்கொண்டது இயையுமாறில்லை.

திக்கு

கிழக்குமுதல் வழக்கிற் கேது திசையே.

இதில் திசை என்பது எழுவாய். ஏது என்பது பயனிலை. ஆதலின் "ஏதுத்திசை" என்னும் பாடம் இயையுமாறில்லை.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

சிவமயம்.

# கந்தபுராண அருஞ்செய்யுள்விளக்கம்

கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்திலுள்ள "நாற்றமுந் தோற்றமும்" என்னும் கஉஉ-ம் செய்யுளுக்கு நமது நாட்டிலுள்ள வித்துவான்கள் பலரும் பலவாறு பொருள் கூறுகின்றார்கள். வல்வை, இயற்றமிழ்ப் போதகாசிரியர், வயித்தியலிங்கபிள்ளை அவர்களும், உடுப்பிட்டி, அ. சிவசம்புப்புலவரவர்களும் உரையுஞ்செய்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நாம் கேட்டும், படித்துமிருக்கின்றேம்., "நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ் - செய்வினைமறைப்பினுஞ் செலவினும் பயில்வினும் - புணர்ச்சி யெதிர்ப்பாடுள்ளுறுத்துவரூஉ - முணர்ச்சி யேழினு முணர்ந்தபின்றை" என்னும் (களஉ௩) தொல்காப்பியச் சூத்திரவிதிக்கு ஒத்துவாராமையினாலே அவைகளொன்றும் பொருத்தமுடையனவாகக் காணப்படவில்லை. ஆதலால் அதனுண்மைப் பொருளை மேற்காட்டிய தொல்காப்பியச் சூத்திரவிதிக்கு ஒக்குமாறு எமது சிற்றறிவிற்குத் தெரிந்தவரையில், 'செந்தமிழ்'கற்போர் பலர்க்கும் பயன்படுமாறு ஈண்டு விளக்கிக் காட்டுதும்.

நாற்றமுந் தோற்றமு நவிலொ ழுக்கமு
மாற்றமுஞ் செய்கையு மனமு மற்றதும்
வேற்றுமை யாதலும் வினைவு நோக்கியே
தேற்றமொ டிகுளையக் கினைய செப்புவாள்.

இ-ள். நாற்றமும்—(வள்ளியம்மையாரிடத்துப் பண்டுள்ள) நறுமணமும்,—தோற்றமும்—(உறுப்புகளின்) றோற்றமும்,—நவில் ஒழுக்கமும்—பயின்ற ஒழுக்கமும்,—மாற்றமும் செய்கையும் மனமும்—வாக்குஞ்செயலும் மனமுமாகிய மூன்றும்,—மற்றதும் வேற்றுமையாதலும்—ஏனையவும் வேற்றுமைப்படுதலையும்,—வினைவும்நோக்கி—மற்றைய நிகழ்ச்சியையும் பார்த்து,--தேற்றமொடு இகுளை அங்கு இனைய செப்புவாள்—(புணர்ச்சி உண்டென்னுந்) தெளிவோடுந் தோழி அங்கே இவற்றைச் சொல்வாள். எ-று.

ஏ-அசை. வேற்றுமையாதலும் என்பதை நாற்றமுதலியவற்றோடு தனித்தனி கூட்டிப்பொருள்கொள்க. நவில் - முதனிலைத்தொழிற்பெயர். நவிலல் ஈண்டுப்பயிறல். இப்பொருட்டாதலை "கொன்னவில் குறவர் மாதர்" என இப்படலத்துப் பின்னர்க்கூறப்படுதலானும், "கடிமனைச்சிறார்க் கடுங்கட்கறவை வடிநவில்வேலோன் மறுத்தோம்பல்வேட்டோன்" எனப்பிறர் கூறுமாற்றானும் அறியப்படும். தொல்காப்பியனார் "செய்வினைமறைத்தல்" எனத்தொகுத்துக் கூறியதை இந்நூலாசிரியர் 'மாற்றமுஞ்செய்கையு மனமும்' எனவிரித்துக் கூறினர் எனக்கொள்க. மற்றதுஎன்பதில் து-சாரியை. "ஆயதொருபோழ்துதனில்" என்பதிற்போல. மற்றவும் என்றது. உண்டியையும் செலவையும் பயில்வையும், "மற்றவும்" எனவும் பாடம். செய்யுளாதலின் முறைபிறழக் கூறினர். நாற்றமுதலிய ஏழனையும் நச்சினார்க்கினியர் விளக்கி அச்சூத்திரத்தின்கட் கூறியவற்றை அநுசரித்து நாமும் இங்கு விளக்கிக்காட்டுதும். நாற்றம்வேறுபடுதலாவது:—"ஓதியுநுதலும் பேதைப்பருவத்துக்குத்தக நாறுது தலைவனுடைய கூட்டத்தினால் மான்மதச்சாந்து முதலியனவும் பலபூக்களும் விரவிநாறுதல்." வள்ளியம்மையாரும் தலைவராகிய சுப்பிரமணியப்பெருமானைக் கூடினாராதலின் அவர்கண்ணும் முன்னுள்ள மணம் வேறுபட்டுத் தெய்வமணங்கமழ்ந்ததென்பது. தோற்றம் வேறுபடலாவது:—"நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப்பருவத்து வெள்ளைநோக்கின்றி உள்ளொன்றுகொள்ள நோக்குங்கண்ணும் தங்நிலைதிரிந்து துணைத்து மெல்கிப்பணைத்துக்காட்டும் தோளுமுலையு மென்றின்னோரன்ன." வள்ளியம்மையாரிடத்தும் இவ் வேறுபாடுகள் காணப்பட்டன என்பது. ஒழுக்கம் வேறுபடலாவது:—"பண்ணை ஆயத்தோடுமுற்றிலான் மணற்கொழித்துச் சோறமைத்தன் முதலியன முனிந்தகுறிப்பினளாய்ப் பெண்டன்மைக்கேற்ப ஒழுகல்." இங்குத் தோழி, வள்ளியம்மையார் இதற்குமுன் தன்னுடனிகழ்த்தும் விளையாட்டைமுனிந்தவராய்ப் பெண்டன்மைக்கேற்ப ஒழுகலால் புணர்ச்சி உண்டென அறிந்தாளென ஈண்டைக்கேற்பமொழிந்து கொள்க. உண்டிவேறுபடுதலாவது:—பண்டு பான்முதலியன கொண்டு ஒறுத்து ஊட்ட உண்டுவருகின்றாள் இப்பொழுது ஆசாரமு நாணுங் காதலு மீதூர அதன்மே லுவப்பு ஆண்டு இன்றி மிக ஒறுத்த உள்ளத்தளாதல். இங்

குத் தோழி தான் கொடுக்கும் உணவுப்பொருள்களை வள்ளியம்மை யார் பண்டுபோல உண்ணாது வெறுத்தலாலறிந்தாளென்பது. செய் வினைமறைத்தலாவது:—முன்புபோலாது இக்காலத்து நினைவுஞ்செ யலுந் தலைவனோடுபட்டனவேயாகலின் அவை பிறர்க்குப் புலனாகா மை மறைத்தல். அஃது ஆயத்தோடுகூடாது இடந்தலைப்பாட்டிற் கேதுவாக நீங்கிநிற்றலாம். ஈண்டுத் தோழியும் தன்னுடன் கூடா து வேறிடத்து நீங்கி நிற்றலாலறிந்தாளென்பது, நச்சினார்க்கினியர் நினைவுஞ்செயலும் எனக்கூறியவற்றோடு மாற்றமும் என ஒன்றுகூட் டித் திரிகாணமும் என இவ்வாசிரியர்கொண்டனரெனக்கொள்க. செலவுவேறுபடுதலாவது:—பண்டுபோல வேண்டியவாறு நடவாது சீர்பெறநடந்து ஓரிடத்திற்சேறல், வள்ளியம்மையாரிடத்தும் இது காணப்பட்டதென்பது. பயில்வுவேறுபடுதலாவது:– "செவிலி முலை யிடைத்துயிறல்வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல்." இங்குத் தோழிவள்ளியம்மையார் தன்னிடத்திற்றுயிறலைவேண்டாது வேறோரிடத்திற் பயிறலால் அறிந்தாளென்பது. இவ்வாறே இவ்வேழ னது வேறுபாட்டானும் முன்னுறுபுணர்ச்சி உண்டெனத்தெளியு மென்பது. நிகழ்ச்சி, தினையழிதன் முதலாயின. இதனானும் புணர்ச்சி உண்டெனத் தெளியுமென்பது. அஃது "இப்புனமழிதரவெங்ஙனே கினை" எனவினவுதலானே அறியப்படும். இனைய என்றது வருஞ் செய்யுளிற் கூறுவனவற்றை. இதனால் தோழியுணர்ச்சியுள் முன்னுற வுணர்தல் கூறப்பட்டது.

> "முன்னுறவுணர்தல் குறையுற வுணர்த
> லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
> றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி." என்பது சூத்திரம்.

சி. கணேசையர்.

---

உ

# சாக்ரடீஸ்

(உ௦க-ம் பக்கத்தொடர்ச்சி)

கிரை—ஆம் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான், சாக்ரடீஸ்.

சாக்—அப்படியாகில் அவை சொல்லும் "நீர் எங்களோடு செய்து கொண்ட ஒப்பந்த உடன்படிக்கைகளை முறித்துக்கொள்ளு

கிறீரல்லவா? பலாத்காரமாகவாவது ஏமாற்றியாவது உம்மைக் கட்டுப்படும்படி நாங்கள் செய்யவில்லே. நீரும் அவசரமாகத் தீர்மானிக்கவேண்டியதில்லே. எங்களிடத்திலுமக்கு அதிருப்தியிருந்தபோதிலும் நாம் செய்துகொண்ட உடன்படிக்கை அநியாயமானதென்றுமக்குத்தோற்றினும் இந்த 70-வருடங்களில் நீர் ஊரைவிட்டு நீங்கியிருக்கலாம். லக்கிடேமன், கிரீட் நகரங்கள் நன்றாயாளப்படுவதாக அடிக்கடி பிரியமுடன் சொன்னாலும் நீர் அவற்றிற்குப்போகவில்லே. நம்மவருடைய வேறெந்த நகரங்கட்கேனும், அல்லது அந்நிய நகரங்கட்கேனும் நீர் போனதில்லே. நொண்டி, குருடு, முடம் இவர்கட்கும் குறைவாகவே நீர் ஆதன்ஸ் நகருக்கு வெளியே போயிருக்கிறீர். இதனால், நகரத்தினிடத்திலும், அதன் சட்டங்களாகிய எங்களிடத்திலும், மற்ற அதீனியரைவிட அதிகமாகவே திருப்தியடைந்திருக்கிறீரென்பது வெளிப்படை. ஏனெனில், சட்டங்களில்லாத நகரத்தின்பேரில் யார் திருப்தியடைவார்கள். நீர் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இப்போது நடக்கமாட்டீரோ? எங்கள் வார்த்தையை நீர் கேட்கும்பக்ஷத்தில் கட்டாயம் அவ்விதம் நடந்துகொள்ளக் கடவீர். ஆதன்ஸ் நகரைவிட்டு ஓடி உம்மைக்கேவலப்படுத்திக் கொள்ளமாட்டீர். நன்றாயோசித்துப் பாரும். உமது உடன்படிக்கைக்கு மீறிநடப்பதால் உமக்காவது உமது நண்பர்கட்காவது என்னநன்மை விளையப்போகிறது. உமது நண்பர்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்கள் தேசத்தை விட்டுநீக்கப்பட்டுச் சுதந்திரம், ஆஸ்திமுதலியவைகளை இழப்பது அநேகமாக நிச்சயம். நீர் சம்பந்தப்பட்டவரையில் அயல் நகரங்களாகிய தீப்ஸ், மகாரா இவைகளில் யாதேனுமொன்றற்குப் போகலாம். இரண்டும் நன்றாயாளப்படுகின்றன. ஆயினும் சாக்ரடீஸ், இக்குடியரசுநாடுகட்கு நீர் ஒரு சத்துருப்போன்று கருதப்படுவீர். நகரத்தின் நன்மையைக்கருதுகிற ஒவ்வொருவரும் உம்மை நன்குமதிக்காது சட்டத்தைக்கெடுப்பவரென்றே எண்ணுவர். நீரும் நியாயாதிபதிகள்கொண்ட கருத்தை ஸ்திரப்படுத்தி அவருடைய தீர்

மானஞ் சரியானதென்று காணப்படுமாறு செய்வீர். ஏனெனிற் சட்டத்தைக்கெடுக்கு மொருவன் * வாலிபர்களையும் யோசனையற்றவர்களையும் தீயவழியுய்ப்பவனென்றே கருதப்படலாம். இவ்வாறாயின், நன்றாயாளப்பட்ட நகரங்களையும், நாகரீகம்பெற்ற மனிதர்களையும் நெருங்காதுசெல்வீரோ? அப்படிச்செய்யின், உயிர்தரித்தல் நல்லதாகுமோ? அன்றி அவ்விதமனிதரோடு கூடி வெட்கமின்றிச்சம்பாஷிப்பீரோ? எதைப்பற்றிச் சம்பாஷிப்பீர்? நீர் இங்குப்பேசுகிறவைகளைப் பற்றியோ? தர்மமும், நியாயமும், இராஜாங்க அங்கங்களும், சட்டமும் மனிதற்குவேண்டியவையிற் சிறந்தவையென்று கூறுவீரோ? அப்படிச்சொல்லுதல் சாக்ரடீஸுக்கு மிகுந்த அவமானம் விளைவிக்குமென்று நீர் நினைக்கவில்லையோ? நீர் கட்டாயம் அப்படி நினைக்கவேண்டும். அவ்விதஞ்செய்யாது நீரிவ்விடத்தைவிட்டுப் போவீர்; தெசலேயிலுள்ள, கிரைடோவின் நண்பரிடஞ்செல்வீர், அவ்விடத்தில் ஒழுங்கின்மையும், தோன்றியபடி செய்தலும் மனிதரிடமுண்டு. தப்பியோடுகிறவர்கள் தரித்துக்கொள்ளும் குடியானவன்போர்வை அல்லது யாதேனுமொரு உடைதரித்து மாறுவேடம் பூண்டு நீர் சிறையினின்றுந்தப்பி யோடிவந்ததைக்கேட்க அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். ஆயினுமவர்களில் யாரேனுமொருவர், என்ன உமக்குவயதாகிவிட்டது. இன்னுஞ் சிறிதுகாலந்தான் வசிப்பீர், யாவற்றிற்குமேலான சட்டங்களைக் கடந்தொழுகும்படியாகவுமக்கேன் இவ்வாழ்க்கையிலிவ்வளவு பற்று என்று கேளாரோ? அவர்களுக்குத் திருப்தியாய் நீர் நடந்தால் ஒருவேளை அவர்கள் உம்மை அவ்விதங்கேளார். உம்மை வெறுக்கும்படிசெய்துகொண்டீராகில் நீர் தலைகுனிந்து நாணும்படியான சொற்கள் பல கேட்பீர். ஆதலின் யாவரையுந் தோத்திரஞ்செய்து அவர்க்கடிமையாய் நீர் உம்முடைய வாழ்நாளைக் கழிப்பீர். இன்னும், தெசலேயில் விருந்துண்பதைத்தவிர நீர் என்னசெய்யப்போகிறீர். ஆதலின் விருந்தை உத்தேசித்து தெசலேநகரத்திற்கு

---

* சாக்ரடீஸின் மேற்காட்டிய குற்றங்களு ளிதுவொன்று.

யாத்திரை சென்றதாக முடியும். அவ்வாறாயின், நியாயத்தைப்பற்றியும் தருமத்தைப்பற்றியும், நாம் முன்கூறியவையெல்லாம் எங்கேநிற்கும்?

இதுநிற்க, நீர், உமதுகுழந்தைகட்காக உயிர்வாழ விரும்புகிறீரல்லவா? அவர்களை வளர்த்துப் படிப்பிக்க நினைக்கிறீரல்லவா? என்ன? அவர்களை உம்மோடு தெசலே நகர்க்குக்கூட வழைத்துச்சென்று அவ்விடத்திலவர்களை வளர்த்துப் படிப்பிப்பீரோ? இவ்வித நன்மையை அவர்கட்குச் செய்யும்பொருட்டு, நீர் அவரைத்தன் நாட்டிற்கு அன்னியராக்குவீரோ? அன்றி ஆதன்விலேயே யவரைவிட்டு நீர் செல்வதாகவைத்துக்கொண்டாலும், நீர் அவருடனில்லாமற்போயினும் உயிருடனிருப்பின் அவர்கள் நன்று வளர்க்கப்பட்டுப் படிப்பிக்கப்படுவாரென்று நினைக்கலாமோ? சரிதான், ஒருவேளை உன் நண்பர் அவர்களைக்கவனித்துப் பார்த்துக்கொள்வரென்று எண்ணலாம். நீர் தெசலே நகர்க்குயாத்திரைசென்றால் பார்த்துக்கொள்ளும் நண்பர் நீர் * யமபுரத்திற்கு யாத்திரையாகச்சென்றால் பார்த்துக்கொள்ளாரோ? உம்முடைய சிநேகிதரென்று அழைத்துக்கொள்ளுகிறவர்களால் யாதேனுமுமக்குப் பலனிருப்பின் நீர் இதை நிச்சயமாக நம்பவேண்டும்.

சாக்ரடீஸ், உம்மைப்பேணிவளர்த்த எங்கள் சொல்லைக்கேளும். உமது குழந்தைகளைப்பற்றி நினையீர், உமதுயிரைப்பற்றி நினையீர். நியாயத்திற்கு முன்னாலெதையும் வைக்காதீர். அப்போதுதான் நீர் வானுலகஞ்செல்லுகையில் அங்கு உமது செய்கைகளைப்பற்றி விசாரிப்பவரின் முன்னிலையில் நீர் அவற்றிற்கு நன்றாய் உத்திரவாதஞ்சொல்லலாம். நீர் இப்பொழுது எண்ணியதைச் செய்தால் இவ்வுலகத்திலுமக்கேனும் உமது நண்பர்க்கேனும் அதிகமான சந்தோஷமும், நியாயமும், பரிசுத்தமுங்கிடையாது. நீர் இறந்தபின்பும் உமக்குச்சுகங் கிடையாது. இது நிச்சயம், இப்போது சட்டங்களாகிய

---

* மனிதர் இறந்தபின் அவருடைய ஆத்மா Hades என்னுமிடத்திற்குச் செல்வதாக அவர் கொள்கை.

எங்களால் தீமையிழைக்கப்படாது மனிதரானிழைக்கப்பட்டு நீர் வெளியேறினதாக முடியும். இவ்வித அவமானவழியில், தீமைக்குத்தீமையைப் பிரதிபாலித்தும், கெடுதிக்குக்கெடுதியைக் பிரதிகொடுத்தும், எங்களுடன்செய்துகொண்ட உடன் படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும், முறித்துக்கொண்டு நீர் சிறிதுங் கெடுதல் விளைக்கக்கூடாத உமக்கும், உமதுநண்பர்க்கும், உமது தேசத்திற்கும், எங்கட்கும், கெடுதல்விளைத்துத் தப்பியோடினால், நீர் உயிரோடிருக்கையில் நாங்கள் உம்மைக்கோபிப்போம். நீர் இறக்கும்போது எம்முடைய சகோதரரான யமபுரச்சட்டங்கள் உம்மையுபசரித்து ஏற்றுக்கொள்ளா. ஏனெனில், நீர் இங்கு எங்களை இயன்றவரை தொலைக்கமுயன்றீரென்று அவைகள் உணரும். ஆதலின் நாங்கள் சொல்வதைக்கேளும். தான்சொல்வதுபோல உம்மைச் செய்யும்படி கிரைடோவைத் தூண்டவிடாதீர்."

என்னருமை நண்ப, கிரைடோ, ஆவேசம் வந்தவர்கள் குழலோசைகேட்பதாக உணர்வதுபோல நானிதுவரை சொன்னவைகளை நான்கேட்பதாக எனக்குத்தெரியு மென்பதை நன்றாயறிந்துகொள். இவ்வார்த்தைகளின் ஓசை என்காதிலின்னுந் தொனித்துக்கொண்டே யிருக்கிறது. அது மற்ற வார்த்தைகளையெல்லாம் அடக்கிவிடுகிறது. நீ என் மனதைத் திருப்புவதிற் பேசுகிறபேச்செல்லாம் வீணென்றே எனக்கு நிச்சயமாகத்தோற்றுகிறது. ஆயினும் என் மனதைத் திருப்ப உன்னாலாகுமென்று உனக்குத்தோற்றினால், மேற்கொண்டு சொல்லலாம்.

கிரைடோ—இனியொன்றுமென்னாற் சொல்லமுடியாது, சாக்ரடீஸ்.

சாக்ரடீஸ்—அப்படியாயின், கிரைடோ, இருந்தபடி யிருக்கட்டும். கடவுள் நம்மை அப்படி நடத்துவதாகத் தெரிவதால் நான் சொல்லுகிறபடி நடப்போம்.

---

R. அரங்காசாரியர்.

# DEPARTMENT OF AGRICULTURE, MADRAS

## COCOANUT BEETLES

## தென்னைமரத்து வண்டுகள்

இரண்டுவகை வண்டுகள் தென்னைமரங்களையும் மற்றப்பனைவகைகளையும் பீடித்து அம்மரங்களுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்திற் செள்ளுவென்றும் பெயர். அது தலையில் ஒரு கொம்புடைய கருப்புவர்ணமுள்ள ஒரு பெரியவண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் தலையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளந்தென்னைமரங்களை இவ்வண்டுகள் துளைத்து மிகவும் நாசமாக்குவதைப்போல் முற்றினமரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் பட்டுப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து புழுக்களைப்போல் வெளிவந்து, அழுகிய வஸ்துக்களைத்தின்று பெரிதாகி நாளடைவில் வண்டாய் உருமாறுகிறது.

தமிழிற் செவ்வண்டென்று சொல்லப்படுவது முன்சொன்ன கருப்புவண்டைவிடச் சிறிது. இதை அதனுடைய நீண்ட வளைவுள்ள மூக்காற் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளிற் சாதாரணமாய்த் தென்னம் வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள்வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்து மரங்களைக்கொன்றுவிடும். இப்புழுக்கள் நார் இழைகளைக் கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரத்திற்குள் உருமாறி வண்டுகளாகின்றன.

### இவைகளின் கெடுதிகளை மாற்றக்கூடிய பிரயத்தனங்கள்

தென்னம்வண்டு மரங்களுக்கு மிகுதியாகக் கெடுதி செய்யாவிட்டாலும், செவ்வண்டினல் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூத

மாயிருக்கிறது. இந்தத் தென்னம்வண்டை அனேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல் வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசிகொண்டு எடுத்துவிடலாம்.

2 இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளைத் தாரினல் தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களிற் செய்திருக்கும் காயங்களிலும் மேற்சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டாற் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளைவைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டைவைத்தபின் மரங்களை இவைகளின் பீடிப்பிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்கமுடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனல் தென்னம்வண்டைத் துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினுற் பீடிக்கப்பட்டமரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டாது. ஆகையால் அவைகளைத் தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னுல் வண்டுகளாகமாறிப் புதுமரங்களையும் நாசமாக்கும்.

5. ஒருதோப்பிற் பட்டுப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீறியுடைத்துக் காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம்வண்டு பல்கிப் பெருகும். தோட்டத்திற்குள் எவ்விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில் தென்னைமரத்துச் செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்கிற அபிப்பிராயமுண்டு. ஆகையால் மேற்றரையிலிருந்து சில அடிகளுக்குமேல் மரத்தைத் துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித

அபிப்பிராயம் தப்பானது. மேற்சொன்னபிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிகநஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படிச்செய்யவே கூடாது.

மேற்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றையொன்று பொறுத்ததாயிருக்கிறது. தென்னம்வண்டு நன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளையுண்டாக்கிச் செவ்வண்டு அதில் வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினாற் பட்டுப்போன மரங்கள் தென்னம்வண்டுகள் பல்கிப்பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால், மேற்சொன்ன முன்ஜாக்கிரதையோடு கவனஞ்செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளாற் பீடித்த தென்னந்தோப்பில் மரங்கள் நாளடைவில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நாசமடைவதைத் தடுக்க முடியாது.

ஸி. ஏ. பார்பர்,

சர்க்கார் தாவர சாஸ்திரி.

---

# புத்தகக் குறிப்பு

ஆர்யமத உபாக்யானம் முதற்பாகம்:—இது திருநெல்வேலி மகா-௱-௱-ஸ்ரீ-ஏ. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் செய்ததை ஒழுங்குபடுத்தியும் புதியகதைகள் சேர்க்கப்பட்டும் மைலாப்பூர் ஜனரல் சப்ளைஸ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பெற்றது. இது நம் இந்திய மாணவர்களுக்கெல்லாம் நல்லொழுக்கமும் நல்லறிவுமுண்டாதற்பொருட்டுத் தப்பாது கற்பிக்கத்தக்க சிறிய உபாக்கியானங்கள்-54 அடங்கியுள்ளது. இடையிடையே கதைகளைக்க காட்டத்தக்க படங்களுடன் தெளிவான நடையிலெழுதப் பெற்றிருக்கிறது.

இதன் விலை அணா 4.

ப-ர்.